விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே



சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 22 செவ்வாய்க்கிழமை (07.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 262

## நாட்டில் மேலும் 3,171 பேருக்கு கொரோனா

(கொழும்பு)
நாட்டில் மேலும் 3 ஆயிரத்து 171 ▷15

## கோவிட்டால் 180 பேர் பலி

(கொழும்பு)
நாட்டில் கோவிட்டால் மேலும் 180 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக் களம் அறிக்கை வெளியிட்டுள் ளது.
இதில் 30 வயதுக் ▷15

## அத்தியாவசிய பொருட்கள் தொடர்பான
# அவசரகாலச் சட்டம் நிறைவேறியது

### ஆதரவாக 132 வாக்குகள் | எதிராக 52 வாக்குகள்



(கொழும்பு)
அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டம் பாராளு மன்றில் 80 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.
ஆதரவாக 132 வாக்குகளும் எதிராக 52 வாக்குகளும் அளிக்கப் பட்டன.
(15ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டத்தின் ஊடாக மக்கள் மீது அரசு அடக்குமுறையை பிரயோகிக்கின்றது

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித் குற்றச்சாட்டு



(கொழும்பு)
அவசரகாலச்சட்டத்தின் ஊடாக வாது மக்கள் மீது அரசாங்கம் அடக்கு முறையைப் பிரயோகிப்பதாக எதிர்க்கட்சித்தலைவர்சஜித்பிரேம தாஸ குற்றம் சுமத்தியுள்ளார்.
அத்தியாவசியப் பொருட் களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு ▷15



## கபட நோக்குடன் அவசரகால நிலை அமுல்

சபையில் சுமந்திரன்
03ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாவட்டத்தில் 213 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 213 பேருக்கு தொற்று கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் திணைக்களம் மற் றும் மாவட்டச் செயலகம் ▷15

### யாழில் தொற்று குறைந்தாலும்
## அபாய நிலை நீடிக்கின்றது

### யாழ்.மாவட்ட அரச அதிபர்



(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தில் கடந்த வாரத்தோடு ஒப் பிடுகையில் தொற்றாளர்களின் எண்ணிக் கையில் சற்று வீழ்ச்சி அடைந்திருந்தாலும் கொரோனா அபாய நிலை தொடர்ந்து நீடிப்பதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் மகேசன் தெரிவித்துள்ளார்.
(15ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறையில் எழுமாற்று பரிசோதனை

### 11 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்.பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரிபிரிவில் மேற்கொள்ளப்பட்ட எழு ▷15

## வவுனியாவில் கடற்படை பேருந்து மோதியதில்

### இளைஞன் உயிரிழப்பு

(வவுனியா)
வவுனியா ஈரப்பெரியகுளத்தில் கடற்படை பேருந்துடன் மோட்டார் சைக்கிள் மோதி ▷15

### சாவகச்சேரியில் கோவிட்டால்
## கணவன், மனைவி அடுத்தடுத்து மரணம்

(சாவகச்சேரி)
கொரோனாத்தொற்றுக்காரண மாக மனைவி உயிரிழந்து அடுத்த வாரம் கணவனும் உயி ரிழந்த சோகச் சம்பவம் சாவகச்சேரி நுணாவில் பகுதியில் இடம் பெற்றுள்ளது. ▷15

### வவுனியாவில் மேலும்
## 121 பேருக்கு கொரோனா

(வவுனியா)
வவுனியாவில் மேலும் 121 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய் யப்பட்டுள்ளது. ▷15

### யாழ்ப்பாணத்தில் 4 பேர் உட்பட
## வடக்கில் 10 பேர் கொரோனாவால் பலி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் நால்வர் உட்பட வடக்கில் 10 பேர் கொரோ னாத் தொற்றால் உயிரிழந்துள் ளனர்.
கோவிட்-19 நோயினால் பாதிக்கப்பட்டு மந் திகை ஆதார ▷15

# பணத்தை அச்சிடுவதனையே இந்த அரசு செய்கின்றது

## எதிர்க்கட்சி எம்.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்த அரசாங்கம் பணத்தை அச்சிடுவதனை மட்டுமே நன்றாகச் செய்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நாட்டில் அச்சு மை தீரும் வரையில் அரசாங்கம் பணம் அச்சிடும் என அவர் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவதற்கு அரசாங்கம் அவசரப்பட்டபோதிலும் கோவிட் கட்டுப்பாடு குறித்த சட்டங்களை அமுல்படுத்த அரசாங்கம் அவசரப்படாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்திற்கான எதிர்ப்பு நாளுக்கு நாள் வலுவடைந்து வரும் நிலையில், அடக்குமுறைகளை அரசாங்கம் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது என முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார். (ம-03)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு தென்மராட்சியில் நினைவுத்தூபி

## மறவன்புலவு சச்சிதானந்தனிடம் விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்மராட்சி மறவன்புலவு பகுதியில் காணாமல் ஆக்கப்பட்டோர் நினைவாக நினைவுத்தூபி ஒன்று அமைக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளமை தொடர்பில் அதனை அமைத்த மறவன்புலவு சச்சிதானந்தனிடம் பொலிஸ் உயர் அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

"காணவில்லை என்பதால் உங்களை நாம் மறக்கவில்லை. நீங்கள் திரும்பினாலும் திரும்பாவிடினும் நம் உள்ளத்துள் நினைவுள் நீங்காதோரே. வரலாறு உங்கள் புகழைப் பேணும்.

ஈழத் தமிழர் ஈந்த ஒளி விளக்குகள் நீங்கள். உங்கள் நினைவால் உள்ளம் நெகிழும். அனைவர் சார்பிலும் 80 வயதான மறவன்புலவு க.சச்சிதானந்தன்" என்று தெரிவிக்கப்பட்டு 32 பெயர்கள் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களுடன் நினைவுத்தூபி ஒன்று நிர்மாணிக்கப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அங்கு சென்ற பொலிஸார் தன்னை விசாரணைக்கு உட்படுத்தியதாகவும் ஈழம் என்றால் என்ன? என்று அவர்கள் தன்னிடம் விசாரணை மேற்கொண்டதாகவும் மறவன்புலவு சச்சிதானந்தன் தெரிவித்துள்ளார். (ம-03,18,30,33)

# வெள்ளைவான் கலாசாரத்துக்கு ஜனாதிபதி கோட்டாவே தலைமை

## அமைச்சர் ரோஹித்த தெரிவிப்பு



(கொழும்பு)

வெள்ளைவான் கலாசாரத்திற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே தலைமை வகிப்பதாக அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

வீடுகளிலேயே இருக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசியை ஏற்றுவதற்கு படையினர் வெள்ளைவான்களிலேயே செல்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றைய தினம் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் வெள்ளைவான் கலாசாரம் தலைதூக்குமென கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது பிரசாரம் செய்யப்பட்டது.

அதற்காக முதலைக்கண்ணீர் வடித்தனர். ஊடகவியலாளர் சந்திப்பில் படம் காட்டப்பட்டது. முன்னாள் சுகாதார அமைச்சரின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட அந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பங்குபற்றிய இருவர் சிறையில் உள்ளனர். வெள்ளைவான் கலாசாரத்துக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே தலைமை வகிக்கின்றார்.

கோவிட் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ள முடியாமல் வீடுகளிலேயே இருக்கும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்க தடுப்பூசியை ஏற்றுவதற்கு படையினர் வெள்ளைவான்களிலேயே செல்கின்றனர். அவ்வாறு வெள்ளைவான் கலாசாரத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவே மாற்றியுள்ளார்.

வெள்ளைவான்களில் சென்று தடுப்பூசியை ஏற்றாவிடின், வீடுகளுக்குள்ளே முடங்கியிருப்போரின் நிலைமை என்னவாகியிருக்கும் என அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (ம-03)

# இராணுவ மயமாக்கலுக்காகவே அவசரகாலச் சட்டம் - ரவூப் ஹக்கீம்

(கொழும்பு)

நாட்டில் இராணுவ மயமாக்கலை நடைமுறைப்படுத்தவே அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்தியுள்ளது. இதற்காக பல நாடகங்களை அரசு அரங்கேற்றுகின்றது என ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அவசர கால சட்ட ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில், அத்தியாவசிய சேவைகளை பாதுகாப்பதற்காக பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 3 அல்லது 17 ஆம் பிரிவை கொண்டுவந்திருக்கலாம்.

அரசு பல நாடகங்களை நடத்துகின்றது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காட்சிகள் அரங்கேற்றப்படுகின்றன. நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரிகள், பொலிஸார், இராணுவத்தினர் அத்தியாவசிய பொருட்கள் களஞ்சியப்படுத்தியிருக்கும் களஞ்சியசாலைகளை சுற்றிவளைக்கும் காட்சிகளை ஒவ்வொரு நாளும் காட்சிப்படுத்தி வருகின்றனர்.

இதன் மூலம் மக்களை அரசு ஏமாற்றுகின்றது. வலுக்கட்டாயமாக சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அந்நிய செலாவணி பிரச்சினையால் பொருட்களை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்ட மறுதினமே சர்வதேச ஊடகங்கள் இலங்கையில் உணவுப்பஞ்சம் ஏற்பட்டுள்ளதாக செய்தி வெளியிட்டன என்றார். (ம-03)

# மீன்பிடி வலைகள் அராலியில் திருட்டு

(அராலி)

அராலி மத்தி பகுதியில் கடலில் மீன்பிடிப்பதற்காக விடப்பட்டிருந்த வலைகள் திருட்டுப்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் நடந்துள்ளது.

சுமார் 20 வலைகள் இவ்வாறு களவாடப்பட்டு உள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-03,104)

# யாழ். போதனா பரிசோதனையில் வடக்கில் 100 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 75 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 100 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களின் விபரம் வருமாறு,

**யாழ்.மாவட்டத்தில் 75 பேர்**

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 42 பேர், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 09 பேர், யாழ்.போதனா வைத்தியசாலையில் 08 பேர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் 06 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 05 பேர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 03 பேர், ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் ஒருவர், புங்குடுதீவு பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்.

**முல்லை. மாவட்டத்தில் 14 பேர்**

வெலிஓயா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 09 பேர், புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் 02 பேர், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் ஒருவர்.

**வவுனியா மாவட்டத்தில் 05 பேர்**

வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர், செட்டிகுளம் ஆதார வைத்தியசாலையில் 02 பேர், வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர், மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் ஒருவர் ஆகியோருடன் முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் 02 பேர், கோப்பாய் தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-03)


கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள்
ஒய்வுநிலை அதிபர்
அமரர்
கந்தையா
பழனிவேற்பிள்ளை
(1991 - 1995)
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பாடசாலை
ஞான வைரவப் பெருமானை வேண்டிநிற்கின்றோம்.

தோற்றம் :18.10.1941
மறைவு : 01.09.2021

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பழைய மாணவர் சங்கம்
யா / கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை


# அத்தியாவசிய பொருட்களுக்கான விலை தொடர்பில் யாழில் கள ஆய்வு

(யாழ்ப்பாணம்)

அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அத்தியாவசியப் பொருட்களின் கட்டுப்பாட்டு விலை தொடர்பான கள ஆய்வு யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் நேற்று யாழ்ப்பாணம், திருநெல்வேலி, கொக்குவில், இணுவில், மருதனார்மடம், சுன்னாகம், பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறை ஆகிய பிரதேசங்களில் உள்ள வர்த்தகநிலையங்கள் பரிசோதிக்கப்பட்டன. (ம-03)

# அவசர கால நிலைமை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கபடமானது

## பாராளுமன்றில் சுமந்திரன் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**அவசரகால விதிமுறைகளை நிறைவேற்றுவதற்கான ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலில் கபடமான எண்ணம் இருக்கிறது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற ஜனாதிபதி வெளியிட்ட அவசரகால விதிமுறைகளை நிறைவேற்றுவதற்கான விசேட விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே எம்.ஏ.சுமந்திரன் இதனை தெரிவித்தார்.

அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை மூலம் ஜனாதிபதியால் அவசர கால சட்டங்களை இரவோடு இர வாக கொண்டுவர முடியும்.

ஜனாதிபதியால் அந்த அவசரகால சட்டங்கள் கொண்டுவரப் படும்போது பாராளுமன்றத்தினால் அதனை கேள்விக்கு உட்படுத்த முடியாது என்பதையும் அவர் இதன்போது சுட்டிக் காட்டினார்.

அவசரகால விதிமுறைகளை நிறைவேற்றுவதற்கான ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலில் கபடமான எண்ணம் இருப்பது புலப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என்றாலும் இவ்வாறு செய்வதை ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-5)



# மீண்டும் பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை

## கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்

(கொழும்பு)

நாட்டில் மீண்டும் பாடசாலைகளை ஆரம்பிக்க திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எல்.எம்.டி. தர்மசேன தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்கும் போது முன்னுரிமை வழங்க வேண்டிய வகுப்புகள் தொடர்பிலான திட்டங்கள் ஏற்கனவே வகுக்கப்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒக்டோபர் மாதத்தின் நடுப் பகுதியில் பாடசாலைகளை மீளவும் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உயர்தர மாணவர்கள், சாதாரண தர மாணவர்கள் மற்றும் புலமைபரிசில் பரீட்சை மாணவர்களுக்கு முதலில் பாடசாலைகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் குறைந்தளவிலான மாணவர்கள் உள்ள பாடசாலைகளை முதலில் ஆரம்பிக்க உள்ளதாகவும் கல்வி அமைச்சின் பாடசாலை விவகாரம் தொடர்பிலான மேலதிக செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.(நி-5)

# குடிநீர் விநியோகம்

(அக்கராயன்)

கிளிநொச்சிகரைச்சிபிரதேச சபையினால் குடிநீர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது ஏற்பட்டுள்ள வரட்சியான சூழலில் பாரதிபுரம், உருத்திபுரத்தின் வடக்குப் பகுதியான செருக்கன், கோணாவில், அக்கராயன் போன்ற பகுதிகளுக்கு பிரதேச சபையினால் குடிநீர் வழங்கல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குடிநீர் நெருக்கடிக்கு மாவட்ட மட்டத்தில் நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும் என்பதே பொது அமைப்புகளின் கோரிக்கையாக உள்ளன. (7-4)

# அவசரகாலச் சட்டம் ஜனநாயக செயற்பாடு

## சபையில் வாசுதேவ



(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்கள் பதுக்கல்களை தடுக்க அவசரகால சட்டத்தை பயன்படுத்துவது ஒருபோதும் ஜன நாயக விரோத செயற்பாடா காது.

இது ஜனாநாயக செயற் பாடு என அமைச்சர் வாசு தேவ நாணயக்கார நேற்று சபையில் தெரிவித்தார்.

அதேபோல் தற்போது இடம் பெறுவது வியாபார மாபியா அல்ல, வியாபார பயங்கரவாதம் இதனை அவசரகால சட்டத்தின் மூல மாகவே தடுக்க முடியும். அதே போல் அவசரகால சட்டமானது அத்தியாவசியப் பொருட்களின் பதுக்கல், ஊழலுக்கு எதிராக மட்டுமே கையாளப்படும்.

வேறு எந்த காரணத்திற்கும் இது கையாளப்படாது.

எனவே அவசரகால நிலைமையை பிரகடனப்படுத்தியமை ஜனநாயக செயற்பாடாகும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# நுகர்வோர் விவகார திருத்தச்சட்டம் திருத்தங்களுடன் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்களின் விலையை வேண்டுமென்றே உயர்த்தும் நபர்கள் மற்றும் கட்டுப்பாட்டு விலையை விட அதிகமான விலைக்கு பொருட்களை விற்பனை செய்யும் தனிநபர்கள், நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்காக நுகர்வோர் விவ கார திருத்தச் சட்டம் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று பாராமன்றம் கூடிய நிலையிலேயே நுகர்வோர் விவகார திருத்தச் சட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

அதன்படி தனிநபர் வியாபாரத்திற்கான அதிகபட்ச அபராதம் 20,000 ரூபாவில் இருந்து 10 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

அத்துடன் ஒரு நிறுவனத்திற்கான அதிகபட்ச அபராதம் 200,000 ரூபாவில் இருந்து ஒரு கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தனிநபருக்கான குறைந்தபட்ச அபராதம் 1,000 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவாகவும், ஒரு நிறுவனத்திற்கான குறைந்தபட்ச அபராதம் 10,000 ரூபாவிலிருந்து 5,00,000 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# சட்ட விதி முறைகளுக்கு உட்பட்டு ஆட்டோ அலங்கரிக்க அனுமதி

(கொழும்பு)

முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் சில சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு முச்சக்கர வண்டிகளை அலங்கரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முச்சக்கரவண்டிகளை அலங்கரிப்பது தொடர்பான சில சட்ட திருத்தங்களுடன் கடந்த ஓகஸ்ட் 14ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டிருந்தது.இந்த நிலையில் முச்சக் கரவண்டி உரிமையாளர்கள் மற்றும் பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ ஆகியோரிடையே கலந்துரையாடலொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த விடயம் தொடர்பில் பிரதமரிடம், முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் கலந்துரையாடிய நிலையில் குறித்த அனுமதி வழங்கப்பட்டதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டுள்ளார். (நி-5)



வரலாற்று சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 25ஆம் நாள் திருவிழாவான தீர்த்த திருவிழா நேற்று நடைபெற்றது. அதிகாலை நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து வசந்தமண்டப பூஜை இடம்பெற்று, ஆலய தீர்த்த கேணியில் தீர்த்தோற்சவம் நடைபெற்றது.

# பரா ஒலிம்பிக் நிறைவு விழா







## பிரேஸில்- ஆர்ஜென்டினா இடையேயான தகுதி ஆட்டத்தில் பரபரப்பு



பிரேஸில் மற்றும் ஆர்ஜென்டினா இடையேயான உலகக் கிண்ண தகுதிப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை திடீரென இடைநிறுத்தப்பட்டது.

கொவிட்-19 பரவுவதைத் தடுக்க பிறப்பிக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் விதிகளை நான்கு வீரர்கள் மீறியுள்ளதாக அதிகாரிகள் தீர்மானித்ததின் பின்னரே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பிரேஸிலிய அதிகாரிகள் ஆர்ஜென்டினா அணியைச் சேர்ந்த நான்கு பிறீமியர் லீக் வீரர்களைத் தனிமைப்படுத்தியிருந்தனர். அவர்கள் கொவிட்-19 தடுப்பு விதிமுறைகளை மீறியதாகக் கூறப்படுகிறது.

பிரேசில் மற்றும் ஆர்ஜென்டினா அணிகளுக்கு இடையில் ஞாயிற்றுக்கிழமை உலகக் கிண்ண தகுதிச் சுற்று ஆட்டம் சாவோ பாலோ மைதானத்தில் இடம்பெறும் வேளையில் வீர ர்களை தனிமைப்படுத்த பிரேசிலிய சுகாதார அதிகாரிகள் ஆடுகளத்தை ஆக்கிரமித்ததையும், சுகாதார அதிகாரிகள் குழுவைச் சுற்றி வீரர்கள் திரண்டனர். ஆட்டம் நிறுத்தப்பட்டவுடன் ஆர்ஜென்டினாவின் வீரர்கள் மைதானத்தை விட்டு வெளியேறினர். போட்டி தொடங்கிய சில நிமிடங்களில் இந்த நிகழ்வு நடந்தது. (4-6)

## இருபது-20 உலககிண்ணம் பாகிஸ்தான் அணி அறிவிப்பு



2021 ஆம் ஆண்டுக்கான ஐ.சி.சி. ஆண்கள் இருபது-20 உலகக் கிண்ணத்துக்கான 15 பேர் கொண்ட அணியை பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

இதில் ஆசிப் அலி மற்றும் குஷ்தில் ஷா ஆகியோர் மீண்டும் அணிக்கு திரும்பியுள்ளனர்.

பாபர் அசாம் தலைமையிலான அணியில், ஷதாப் கான், ஆசிப் அலி, ஆஸம் கான், ஹாரிஸ் ரவுப், ஹசன் அலி, இமாத் வாசிம், குஷ்தில் ஷா, மொஹட் ஹபீஸ், மொஹமட் ஹஸ்னைன், மொஹமட் நவாஸ், மொஹமட் ரிஸ்வான், மொஹமட் வாசிம், ஷாஹீன் ஷா அப்ரிடி மற்றும் சோஹைப் மக்சூத் ஆகியோர் உள்ளடங்குகின்றனர். (4-6)

## முதல் தர வீராங்கனை ஆஷ்லே பார்டி அதிர்ச்சித் தோல்வி



கிராண்ட்ஸ்லாம் என்ற உயரிய அந்தஸ்து வற்ற அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடந்து வருகிறது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் மூன்றாவது சுற்றில் நம்பர் ஒன் வீராங்கனையான அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆஷ்லே பார்டி, உலக தரவரிசையில் 43 ஆவது இடம் வகிக்கும் அமெரிக்காவின் ஷெல்பி ரோஜர்சுடன் மோதினார்.

முதல் இரு செட்டுகளை இருவரும் தலா ஒன்று வீதம் வென்றனர். இதையடுத்து வெற்றியாளரை நிர்ணயிக்கும் கடைசி செட்டில் ஆரம்பத்தில் ஆஷ்லே பார்டி ஆதிக்கம் செலுத்தினார்.

ஆனால் ஆஷ்லே பார்டி அடுத்தடுத்து செய்த தவறுகளால் அந்த செட்டை 6-7 என கோட்டை விட்டார்.

இறுதியில், ஷெல்பிரோஜர்ஸ் 6-2, 1-6, 7-6 (7-5) என்ற செட் கணக்கில் ஆஷ்லே பார்டிக்கு அதிர்ச்சிவைத்தியம் அளித்தார். நம்பர் ஒன் வீராங்கனை ஒருவரை 28 வயதான ஷெல்பி ரோஜர்ஸ் வீழ்த்தியதும் இதுவே முதல் தடவையாகும். (4-6)

# மூன்றாவது இருபது-20 போட்டி

# பங்களாதேஷை வீழ்த்தியது நியூஸிலாந்து



நியூஸிலாந்து அணிபங்களாதேஷ் சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் விளையாடி வருகிறது. முதல் இரு போட்டிகளில் பங்களாதேஷ் வென்று தொடரில் 2-0 என முன்னிலை பெற்றுள்ளது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 3 ஆவது இருபது-20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. டாஸ் வென்ற நியூசிலாந்து முதலில் பட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் பட் செய்த நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 128 ரன்கள் எடுத்தது.

இதையடுத்து, 129 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் களமிறங்கியது. நியூசிலாந்து அணியினரின் பந்துவீச்சில் சிக்கி விக்கெட்டுகளை இழந்தது.

இறுதியில், வங்காளதேசம் 19.4 ஓவரில் 76 ரன்களுக்கு ஆல் அவுட்டாகி பரிதாபமாக தோற்றது.

நியூசிலாந்து சார்பில் அஜாஸ் படேல் 4 விக்கெட்டும், மெக்கன்சி 3 விக்கெட்டும் வீழ்த்தினர். இதன்மூலம் 52 ரன்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அபார வெற்றி பெற்றது. அத்துடன், இருபது-20 தொடரில் 2-1 என பின் தங்கியுள்ளது. ஆட்ட நாயகன் விருது அஜாஸ் படேலுக்கு வழங்கப்பட்டது.

இரு அணிகளுக்கு இடையிலான 4 ஆவது இருபது-20 போட்டி நாளை நடைபெறுகிறது. (4-6)

# இராசிபலன்

07.09.2021
ஆவணி 22, செவ்வாய்க்கிழமை
அமாவாசை முற்பகல் 7.10 மணிவரை
பூரம் முன்னிரவு 6.55 மணிவரை
சுபநேரம் 10.34-12.04 மணிவரை
இராகுகாலம் 3.04-4.34 மணிவரை
சந்திராஷ்டமம்-அவிட்டம், சதயம்
சித்தாமிர்தம்

வளவன்

**மேஷம்**
தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர்.

**ரிஷபம்**
எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள்.

**மிதுனம்**
உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக அமையும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்**
தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், கொடுத்த வாக்கைக் காப்பாற்றும் எண்ணம் உருவாகும்.

**சிம்மம்**
குடும்பத்தில் பொறுப்புகளும் சுமைகளும் கூடும் நாள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி**
அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் பெறுவீர்கள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட முற்படுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்**
செல்வநிலை உயரும் நாள், பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**விருச்சிகம்**
பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், ஆரோக்கியமான நாள்.

**தனுசு**
வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மகரம்**
உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், செயற்பாடுகளில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.

**கும்பம்**
குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்**
உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

இந்த உலகத்திலேயே உனக்கு மிகவும் முக்கியமானவன் நீதான்

# விடுதலைப்புலிகள் மீதான பிரித்தானியாவின் தடை

## நன்றி தெரிவித்தார் வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

ஜெனிவாவில் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரிலும் அதேபோல இத்தாலியில் நடைபெறவுள்ள சர்வதேச மாநாடொன்றிலும் - இலங்கை மீதான போர்க்குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக கருத்து தெரிவிக்க அரசாங்கம் தயாராகி வருகின்றது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜிஎல்.பீரிஸ் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

ஜெனிவாவில் ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் கூட்டத் தொடரும் நடக்கவுள்ளது. அதற்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சராக நான் பங்கேற்கவுள்ளேன். இணைய வழி ஊடாக இதில் கலந்து கொள்வேன். கடந்த மார்ச் மாதத்தில் இந்த அமர்வு நடந்தது. கடந்த 6 மாதங்களாக பெரும் சிரமங்கள் ஏற்பட்டன.

கொவிட் நெருக்கடிக்கு மத்தியிலும் எமது நாட்டின் பல்வேறு துறைகளிலும் ஏற்பட்ட விருத்திகள் பற்றிய யதார்த்தமான கருத்தை நான் குறித்த பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளேன்.

அதேபோல இத்தாலியில் அடுத்தவாரம் நடைபெறவுள்ள ஐரோப்பிய மாநாடொன்றில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கவுள்ளார்.

இந்த இரண்டு சர்வதேச மாநாடுகளிலும் இலங்கை மீதான குற்றச்சாட்டுக்களை நிவர்த்திசெய்து தெளிவுபடுத்த சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக் கொள்வோம். அதேவேளை சர்வதேச ரீதியில் தீவிரவாதம் மற்றும் அதன் தாக்கம் என்பது தெளிவான அறிவை அனைத்து நாடுகளும் அறிந்துள்ளன.

தீவிரவாத செயற்பாட்டினால் தெற்காசிய நாடுகள் மட்டுமன்றி உலக நாடுகளையும் அழுத்தத்திற்கு இட்டுச்சென்றுள்ளன. அண்மையில் நியூசிலாந்தில் நடந்த கவலைக்குரிய சம்பவம் இதற்கு உதாரணமாகும்.

இதேபோல, தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மீது பிரித்தானியாவினால் விதிக்கப்பட்டிருந்த தடையுத்தரவு நீக்கப்பட்டமையிட்டு நாங்கள் நன்றி கூறுகின்றோம். தொடர்ச்சியாக அந்தத் தடையை நீக்கும்படி பல சக்திகள் கோரிக்கை விடுத்து வந்தபோதிலும் பிரித்தானிய நீதிமன்றம் அந்தக் கோரிக்கையை நிராகரித்து வருகின்றது.

போர் முடிந்த போதிலும் அரசியல் ரீதியிலான செயற்பாடு காரணமாக நாடுகளின் ஸ்திரத்தன்மைக்கு பாரிய சவால் ஏற்பட்டுள்ளதன் காரணமாகவே பிரித்தானியா இந்த தீர்மானத்தை எடுத்திருக்கின்றது என நினைக்கின்றோம். இந்த முடிவானது ஏனைய நாடுகளுக்கும் மிகச்சிறந்த உதாரணமாகும் எனவும் தெரிவித்துள்ளார். (நி-5)

# பதுக்கப்பட்டுள்ள பொருட்கள் மீட்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்படும்

## அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம்

(கொழும்பு)

சட்டத்திற்கு முரணான வகையில் சேகரிக்கப்பட்டுள்ள நெல், சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை மீட்டு அவற்றை மக்களுக்கு நிவாரண விலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் எம்.டீ.எஸ்.பி. நிவுன் ஹெல்ல தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் இது தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து தனக்கு தொடர்ச்சியாக அறியத்தருமாறும் அவர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர், சகல மாவட்ட அதிபர்கள், நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் தலைவர் உள்ளிட்டோருக்கு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

நெல், அரிசி மற்றும் சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை பதுக்குதல், விநியோகத்தை தவிர்த்தல், அதிக விலைக்கு விற்பனை செய்தல் உள்ளிட்ட மக்களை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் செயற்பாடுகளையும் தடுப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மக்கள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் உறுப்புரையின் கீழ் அறிவித்தலொன்றை விடுத்துள்ளார்.

அதற்கமைய சட்டத்திற்கு புறம்பாக இவற்றைப் பதுக்கி வைத்துள்ளமை இனங்காணப்பட்டால் அவற்றை கைப்பற்றி மக்களுக்கு நியாயமான விலைக்கு விநியோகிப்பதற்கு சகல மாவட்ட அதிபர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)

# சட்டவிரோதமாக வருகைதர முயன்ற யுவதி கைது

(மன்னார்)

தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு சட்டவிரோதமாக தப்ப முயன்ற இலங்கையை சேர்ந்த இளம் யுவதி ஒருவர் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டுள்ளார். இலங்கை முல்லைத்தீவு மாவட்டம் முள்ளியவளைப் பகுதியைச் சேர்ந்த யுவதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு விமானம் மூலம் சென்னை வந்துள்ளதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. விசா முடிந்த பின்னர் இலங்கைக்கு திரும்பி செல்லாமல் சட்டவிரோதமாகத் தங்கி வாழ்ந்து வந்துள்ளார். இந்த நிலையில், இலங்கைக்கு திரும்பிச் செல்வதற்காக நேற்று அதிகாலை தனுஷ்கோடியில் இருந்து நாட்டு படகு மூலம் சட்ட விரோதமாக முல்லைத்தீவுக்கு புறப்பட்டுள்ளார்.

இதையடுத்து அப்பகுதியில் மீன்பிடித்து கொண்டிருந்த மீனவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் ராமேஸ்வரம் மெரைன் பொலிஸார் படகில் சென்று குறித்த யுவதியை கைது செய்து தனுஷ்கோடி அழைத்து வந்தனர்.

பாஸ்போர்ட் மற்றும் இலங்கை குடியுரிமை ஆவணங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இது குறித்து ராமேஸ்வரம் அனைத்து மகளிர் பொலிஸ் நிலையப் பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

விசாரணைக்கு பின் ராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(7-4-6-285)

# அத்தியாவசிய பொருட்களை பதுக்காமல் நியாயமான விலையில் விற்பனை செய்யுங்கள்

## வர்த்தகர்களுக்கு யாழ். அரச அதிபர் அறிவுறுத்து



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பொருட்கள் விநியோகத்தினை தங்குதடையின்றி மேற்கொள் வதற்கு அரசாங்கம் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே வியாபாரிகள் பொருட்களை பாதுகாத்து நியாயமான விலையில் விற்பனை செய்ய வேண்டும் என யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண் டவாறு தெரிவித்தார்.

அத்தியாவசிய வொருட்களை பொறுத்தவரையில் சீனி மற்றும் எரிவாயு போன்றவற்றுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு பிரச்சினை தற்போது தீர்க்கப்பட்டு விட்டது. மேலும் சீனியினுடைய விலையும் தற்போது குறைவடைந்துள்ளது. அதே நேரம் உணவு ஆணையாளர் திணைக்களத்தினூடாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் இணைந்த வகையில் இந்த சீனி பகிர்ந்தளிப்புக்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றனவா என கண்காணிப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்படுகின்றது.

பதுக்கல் நடவடிக்கையில் ஈடுபடுவோர் மற்றும் அதிக விலைக்கு பொருட்களை விற்பனை செய்வோர் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் ஊடாக அதனை தடுத்து நிறுத்துவதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (4-7-33)

# ஊரடங்கால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகை வழங்கிய நபர்

(யாழ்ப்பாணம்)

ஊரடங்கு அமுலில் உள்ள நிலையில் மக்களை கூட்டி உதவித்தொகை வழங்கிய குற்றச்சாட்டில் மூவரை நெல்லியடி பொலிஸார் நேற்று விசாரணைக்கு அழைத்துள்ளனர்.

வடமராட்சிபகுதியில் வாழும் வறிய மக்களுக்கு உதவித் தொகையாக ஒருவருக்கு தலா 2ஆயிரம் ரூபாய் வீதம் ஒருவர் உதவி தொகை வழங்கியுள்ளார். நெல்லியடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதவடி பகுதியில் உதவித் தொகை வழங்கப்படுவதை அறிந்த அவ்வூர்மக்கள் பலரும் அவ்விடத்தில் கூடியிருந் தனர்.

அது தொடர்பில் தகவல் அறிந்து அவ்விடத்திற்கு விரைந்த நெல்லியடி பொலிஸார் உதவித் தொகை பெற வந்த மக்களை அவ்விடத்தில் இருந்து அப்புறப்படுத்திய பின்னர், உதவித் தொகை வழங்கியவர், அதற்கான ஏற்பாடுகளை செய்தவர் உள்ளிட்ட மூவரையும் விசாரணைக்காக பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். விசாரணையின் பின் அவர்கள் விடுவிக்கப்படுவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை குறித்த நபர் ஒருவருக்கு தலா 2ஆயிரம் ரூபாய் வீதம் 500 இற்கும் மேற்பட்டவர்களுக்கு 10 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-7-18-33-60)



அமெரிக்க- இலங்கை நிறுவனத்தினூடாக இலங்கை இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டுள்ள கொவிட்-19 தொற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஏனைய நோயாளர்களுக்காக பயன்படுத்தக்கூடிய மருத்துவ உபகரணங்கள் யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தலைமையகத்தினால் யாழ். போதனா வைத்தியசாலைக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

# வலி.கிழக்கு தவிசாளர் நிரோஷிற்கு தொற்று



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் இற்கு கொவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

உடல் நிலையில் மாற்றம் உணரப்பட்டதையடுத்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கோப்பாய் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரியை தொடர்பு கொண்டு அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இச் சோதனையில் அவர் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலையில் அவர் குடும்பத்துடன் இல்லத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார். (4-7-6-18-33)




## பூங்காவனமாய் மனம் பூரிக்கவில்லை ஐயா!



பூங்காவனமாய் மனம் பூரிக்கவில்லை ஐயா
தாங்காது எம்மை வருத்தும் நோயிதனால்
ஏங்கியே நிற்கிறோம் எம் முருகா
யாமிருக்கப் பயமேன் என்றவனே- இன்று
நீயிருக்கும் இடம் வந்தும் வழிபடத் தடையே முறை
தனிமைப்படுத்தலிலே தவிக்குதய்யா எம் வாழ்வு
மனிதப் பேரவல நிலைமாற்றி- இங்கு
இனிமைப்படுத்தி உன் இன்னருளைத் தந்திடய்யா

புலோலியூர் வேல்நந்தன்

## நல்லூரின் நாயகனே குமரா!



வெள்ளியில் விழித்து விரைமலர்ப் பூங்கா
விரைந்துயர் பூக்களைக் கொய்தேன்
அள்ளியென் அகப்பூ ஒப்பவே பார்த்தேன்
அடிமலர் சூட்டிட வந்தேன்
துள்ளிடும் ஆர்வம் துடித்திடும் அன்பு
தூய நின் திருமுகம் முருகா!
தள்ளிட மாட்டாய் தழுவியே காப்பாய்
நல்லூரின் நாயகனே குமரா!

கவிஞர் செ.பரமநாதன்

## ஆறுமுகன் கொடி ஏறியது



ஆறுமுகன் கொடி ஏறியது
அசைந்தாடும் காட்சி அழகானது
கூறும் அவன்வேல் அருளானது
காண்புற்ற கண்கள் குளிரானது
நீறுடன் சூடமும் முக்கனியும்
நினைந்த நேர்த்தி நிறைகாணாது
மீறும் பக்தருளம் பரவசமாய்
மலர்ந்திட வகைசெய் ஆறுமுகா!

கலைமாமணி
கே.ஆர்.திருத்துவராஜா

## கொரோனா கிருமியை வேல்கொண்டு விரட்டிவிடு நல்லூரானே

பரோபகார நற்சிந்தனைகள் அரிதாகிப் போனாலென்ன?
விரோத தீய எண்ணங்கள் கட்டுமீறிப் போனாலென்ன?
குரோத கொடிய பண்புகள் கொடிகட்டிப் பறந்தாலென்ன?
கொரோனா என்னும் விசக்கிருமிகள்
எங்கும் பரவி நின்றாலென்ன?
அரோகரா என்னும் சக்திவாய்ந்த நாமமும்
நல்லூர்க் கந்தனின் கருணையும் இருக்கையிலே

ந.கா. தங்கராசா,
புலோலி.

## நல்லை வாழ் நாயகன்



சரவணபவ நாமத்தின் நாயகன்
சரவணன் சக்தியின் மைந்தன்
வினைகள் தீர்க்கும் வேலவன்
சூரபத்மனை அழித்த வீரவன்
புராணங்கள் போற்றும் அவதாரன்
மாமலை வாழும் அழகேசன்
வள்ளி மனங் கவர் மணவாளன்
நல்லையம்பதி உறையும் வடிவேலன்

லிங்கேஸ்வரன் ஜனார்த்தன்
மறவன் புலோ மத்தி

# தனிமைப்படுத்தல் ஊரடங்கை நீடியுங்கள்

# மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

**செப்டெம்பர் மாதம் 18ஆம் திகதி வரை ஊரடங்கு சட்டத்தை நீடிக்க வேண்டும் என இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

நாட்டில் தற்போது நிலவும் நிலைமைக்கமைய கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையை குறைந்த மட்டத்திற்கு கொண்டுவர வேண்டும் எனவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளமையினால் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் விசேட வைத்தியர் பத்மா குணரத்ன தெரிவித்துள்ளார். பயணக்கட்டுப்பாட்டை கடுமையான முறையில் அமுல்படுத்தவில்லை என்றாலும் தற்போதுள்ள முறையிலாவது 18ஆம் திகதி வரை நடத்தி செல்வது கட்டாயமாகும்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## அடுத்த மாத நடுப்பகுதியில் உயிரிழப்புகளில் வீழ்ச்சி ஏற்படும்

**மரணத்தில் இருந்து தப்பிக்க ஒரேவழி தடுப்பூசி மட்டுமே என்கிறார் பேரா. சன்ன**



(கொழும்பு)

அரசாங்கம் 20-30 வயதுக்குட்பட்டோருக்கு தடுப்பூசி போடத் தொடங்கியுள்ளது.

இதனால், வைரஸ் பரவலில் ஏற்பட்டுள்ள குறைவு, கடுமையான நோய் மற்றும் இறப்புகளில் வீழ்ச்சி போன்ற தடுப்பூசி இயக்கத்தின் முழு விளைவுகளும் ஒக்டோபர் மூன்றாவது வாரத்தில் தெரியவரும் என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார்.

மேலும் பத்து மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தடுப்பூசியின் முழு அளவையும் பெற்றுள்ளனர் என்றும் குறிப்பிட்டார். 60 வயதுக்கு மேற்பட்ட மற்றும் பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்ட சிலர், கொரோனா தடுப்பூசிகளை பெற தயங்குகிறார்கள்.

இந்தத்தடுப்பூசிஅவர்களின் உடல் நிலையை மேலும் சிக்கலுக்கு வழிவகுக்கும் என்று அஞ்சுகின்றனர்.

எனினும் இந்தத் தவறான பயத்தை போக்க வேண்டும். அத்தகையவர்கள் கொரோனா நோயிலிருந்து மரணத்திலிருந்து தப்பிக்க ஓரே வழி தடுப்பூசி மட்டுமே என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன தெரிவித்தார். (நி-5)

## 2000 ரூபாய் கொடுப்பனவு வழங்கும் திட்டம் பூர்த்தி

(கொழும்பு)

வருமானத்தை இழந்தவர்களுக்கு 2000 ரூபாய் கொடுப்பனவு வழங்கும் திட்டம் 100 வீதம் பூர்த்தியடைந்துள்ளதாக பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் வறுமையொழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி தெரிவித்தது.

இந்தக் கொடுப்பனவு 24 இலட்சம் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக செயலணி குறிப்பிட்டது.

எவ்வாறாயினும், வருமானத்தை இழந்தவர்கள் எவருக்கேனும் 2000 ரூபாய் கொடுப்பனவு கிடைக்காவிட்டால் முறையீடு செய்ய முடியும் எனவும் தமது முறையீட்டினை மாவட்ட அரசாங்க அதிபர்கள் அல்லது பிரதேச செயலாளர்களிடம் சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதி செயலணி அறிவித்துள்ளது. (நி-5)

## கிராம மக்களின் மனிதநேய செயற்பாடு

(அநுராதபுரம்)

அநுராதபுரத்தில் மிகவும் பின்தங்கிய கிராமத்தை சேர்ந்த மக்கள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பணத்தை கொவிட் நிதியத்திற்காக தியாகம் செய்துள்ளனர்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக தினசரி வருமானத்தை இழந்த குடும்பங்களுக்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் 2000 ரூபாய் கொடுப்பனவை அவர்கள் இவ்வாறு கொவிட் நிதியத்திற்காக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மிகவும் கடினமான சூழலில் தங்கள் வாழ்க்கையை நடத்தும் குடும்பத்தினரே இவ்வாறு தங்களுக்கு கிடைத்த கொடுப்பனவை இவ்வாறு தியாகம் செய்துள்ளதாக தெரியவந்துள்ளது.

அநுராதபுரம், தலாவ, ஹுங்குரங்கெத்த பிரிவின் அருணபுர கிராமத்தை சேர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற் கொண்டு அவர்கள் இந்த கொடுப்பனவை கொவிட் நிதியத்திற்கு வழங்குமாறு பிரதேச செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதற்கமைய அருணபுர கிராமத்தை சேர்ந்த மக்கள் மேலும் சில உதவிகளை சேர்த்து அதனை கொவிட் நிதியத்திற்கு வழங்கியுள்ளனர்.

நெருக்கடியான காலத்தில் மிகவும் பின்தங்கிய கிராம மக்களின் செயற்பாடு மக்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது. (நி-5)

## வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

### விரதங்கள்



### துன்பங்களைப் போக்கும் புரட்டாதி சனிக்கிழமை



**கருடசேவையின்சிறப்பு**

மகாவிஷ்ணுவின் முதல் பக்தனாக இருப்பவர் கருட பகவான் என்று புராணங்கள் தெரிவிக்கின்றன. மகாவிஷ்ணு கருடனை தனது வாகனமாக தேர்ந்தெடுத்ததால், பிரம்மோற்சவத்தின் போது மற்ற வாகனங்களைவிட கருட வாகனத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. கருட சேவையின் போது தமிழ்நாட்டின் ஸ்ரீவில்லிபுத்தூரில் இருந்து வரும் துளசி மாலை மூலவருக்கு (ஏழுமலையான்) அணிவிக்கப்படும்.

இந்த மாலையுடன் மூல விக்கிரக மூர்த்தி அணிந்து இருக்கும் தங்கச் சங்கலி, மகரகண்டி, லட்சுமிஹாரம் போன்ற நகைகளை கருட சேவையின் போது மட்டும் உற்சவமூர்த்தியான மலையப்பசாமிக்கு அணிவித்து அலங்கரிப்பார்கள். இந்த நகைகள் அணிந்து வரும் மலையப்பசாமியை தரிசனம் செய்வது கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஏழுமலையானையும் கருடனையும் ஒரு சேரவணங்கு வதாக நினைத்து, கருட சேவையை காண லட்சக் கணக்கிலான பக்தர்கள் திருமலையில் கூடுவார்கள். (தொடரும்)

## றிசாத், மனைவி உள்ளிட்டோரின் விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

16 வயதுடைய சிறுமியின் மரணம் தொடர்பாக கைது செய்யப்பட்ட றிசாத் பதியுதீன் மற்றும் அவரது மனைவி, மாமனாரின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. குறித்த மூவரையும் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியல் வைக்க நீதவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த நிலையில் உயிரிழந்த சிறுமி தொடர்பாக அவரது மனைவி, மைத்துனர், தரகர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் மைத்துனர் மற்றும் தரகரை பிணையில் செல்ல நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது. (நி-5)

# எதிர்ப்புப் படைகளின் இறுதிக் கோட்டையான பஞ்சஷீர் மாகாணமும் தலிபான்கள் வசம்

(காபூல்)


**ஆப்கானிஸ்தானில் தலிபான் எதிர்ப்புப் படைகளின் இறுதிக் கோட்டையான பஞ்சஷீர் மாகாணம் தமது முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ளதாக தலிபான்கள் நேற்று தெரிவித்துள்ளனர்.**

இந்த தகவலை தலிபான் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித், "எதிரி கூலிப்படையினரின் கடைசி கோட்டையான பஞ்சஷீர் மாகாணம் முழுமையாக கைப்பற்றப்பட்டது" என ஒரு அறிக்கையில் தெரிவித்து உறுதிப்படுத்தியுள்ளார்.

சில எதிர்ப்பாளர்கள் தோற்கடிக்கப்பட்டதாகவும் ஏனையவர்கள் தப்பி ஓடி விட்டதாகவும் முஜாஹித் அறிக்கையில் தெரிவித்துள்ளதுடன், தங்களை ஒடுக்க மாட்டோம் என்று தலிபான்கள் பஞ்சஷீர் மக்களுக்கு உறுதியும் அளித்துள்ளதாக கூறினார்.

தலிபான் மாகாணத்தை கைவிட்டால் சண்டையை நிறுத்தவும் பேச்சுவார்த்தை நடத்தவும் தயாராக இருப்பதாக எதிர்ப்புக் குழுவின் தலைவர் மசூத் நேற்று முன்தினம் கூறியிருந்தார். இந்நிலையிலேயே மேற்கண்ட அறிவிப்பு வெளியாகியுள்ளது. (7-4)

# 70 சதவீத மக்களின் ஆதரவில் பிரதமர் மோடிக்கு முதலிடம்



(புதுடில்லி)

பிரதமர் நரேந்திர மோடியின் செயற்பாடுகளுக்கு 70 சதவீதம் பேர் ஆதரவளித்துள்ளதாக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியலில் மற்ற சர்வதேச தலைவர்களை விட பிரதமர் மோடி முன்னிலையில் உள்ளார்.

அமெரிக்காவை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வரும் 'மார்னிங் கன்சல்ட்' என்ற சமூக வலைதளம் உலக அளவில் மக்களின் ஆதரவு பெற்ற பிரபல தலைவர்களின் பட்டியலை வெளியிட்டு வருகிறது.

இந்த வலைதளத்தில் பிரபல தலைவர்களுக்கு மக்கள் அளிக்கும் ஆதரவுகள் உடனுக்குடன் பதிவேற்றம் செய்யப்பட்டு வாரந்தோறும் புதிய பட்டியலை வெளியிட்டு வருகிறது.

அந்த வகையில் செப்டம்பர் 2 -ஆம் திகதி உலக அளவில் மக்களின் ஆதரவு பெற்ற தலைவர்களின் பட்டியலில் 70 சதவீத மக்களின் ஆதரவுடன் பிரதமர் மோடி முதலிடத்தில் உள்ளார்.

அவருக்கு அடுத்த இடங்களில் மெக்ஸிகோஸ் ஜனாதிபதி ஆண்ட்ரூஸ் மேனுவல் லோ பஸ் ஒப்ரடார் (64 சத வீதம்), இத்தாலிபிரதமர் மரியோ திராகி (63 சத வீதம்), ஜேர்மனி பிரதமர் ஏஞ்சலா மொகெல் (52 சதவீதம்), அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் (48 சத வீதம்), அவுஸ்திரேலியா பிரதமர் ஸ்காட் மோரிஸன் (48 சதவீதம்) ஆகியோர் உள்ளனர். (7-4)

# தாய்வான் எல்லைக்குள் நுழைந்த சீனாவின் 19 போர் விமானங்கள்

(தாய்பேய்)

சீனாவின் 19 இராணுவ போர் விமானங்கள் மற்றும் அணு ஆயுதத்திறன் கொண்ட விமானங்கள் தனது வான் பாதுகாப்பு மண்டலத்திற்குள் நுழைந்து வெளியேறியதாக தாய்வான் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தாய்வானை சீனாவின் ஆளுகைக்குள் உள்ள ஒரு பகுதியென சீனா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. ஆனால் இதனை ஏற்கமறுத்து தாங்கள் ஒரு இறையாண்மை கொண்ட சுயாதீன தனியரசு என தாய்வான் தெரிவித்து வருகிறது.

இந்நிலையில் மீண்டும் ஒரு சீண்டல் நடவடிக்கையாக சீன விமானப் படையின் 19 போர் விமானங்கள் தமது வான் பரப்பில் பறந்ததாக தாய்வான் கூறியுள்ளது. அந்த விமானங்கள் அணு ஆயுதங்கள் மற்றும் நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு ஏவுகணை களை தாங்கிச் செல்லும் திறன் வாய்ந்தவை என்றும் தாய்வான் தெரிவித்துள்ளது.

எனினும் இந்த நடவடிக்கை குறித்து சீனா இதுவரை எந்தக் கருத்துக்களையும் தெரிவிக்கவில்லை. (7-4)

# நிபா வைரஸ் தொற்றினால் கட்டுப்பாடுகளை விதித்த தமிழகம்

(சென்னை)

**கேரளாவில் நிபா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதைதொடர்ந்து தமிழக அரசு கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.**

**இதனையடுத்து தமிழகத்தின் எல்லையோரத்தில் கட்டுப்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.**

**இது குறித்த கருத்து தெரிவித்துள்ள அவர், நிபா வைரஸ் பரிசோதனைகளை விரிவுப்படுத்தவும், காய்ச்சல் முகாம்களை எல்லையோரம் அதிகரிக்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.**

**நிபா வைரஸ் 10 சதவீதத்திற்கும் குறைவாக ஒரு நோயாளியிடமிருந்து மற்றொருவருக்கு பரவ வாய்ப்புள்ளதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.** (7-4)

# கினியாவில் ஆட்சி கலைப்பு; காலவரையறையற்ற ஊரடங்கு



(கொனாக்ரி)

கினிய சிறப்புப் படைகள் நேற்று முன்தினம் நடத்திய சதிப் புரட்சியில் அதிகாரத்தைக் கைப்பற்றியதுடன், ஜனாதிபதியை கைது செய்து, ஏழை மேற்கு ஆபிரிக்க நாட்டில் ஊரடங்கு உத்தரவை விதித்துள்ளன.

"ஜனாதிபதியை கைது செய்த பிறகு, அரசியலமைப்பைக் கலைக்க நாங்கள் முடிவு செய்துள்ளோம்" என்று AFP செய்திச் சேவைக்கு அனுப்பப்பட்ட காணொளியில் இராணுவ வீரர்கள் துப்பாக்கிஏந்தியவாறு தெரிவித்துள்ளனர்.

தற்சமயம் கினியாவில் அரசாங்கம் கலைக்கப்பட்டு நில மற்றும் வான் எல்லைகள் மூடப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் தேசிய தொலைக்காட்சிசேவையை கைப்பற்றிய சிறப்பு படைகள்,மறு அறிவிப்பு வரும் வரை நாடு தழுவிய ஊரடங்கு உத்தரவை விதிப்பதாகவும், ஆளுநர்கள் இராணுவத்தால் மாற்றப்படுவார்கள் என்றும் கூறியது.

கினிய குடியரசு கணிசமான கனிம வளங்களை கொண்டுள்ள போதிலும், உலகின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றாகும். சுமார் 13 மில்லியன் மக்கள் வாழும் நாடு நீண்ட கால மாக அரசியல் ஸ்திரமின்மையால் பாதிக்கப்பட்டுள்ளது.(7-4)

# தனிநாடு கோரிய போராளிகள் மீது தாக்குதல்; 5600 பேர் உயிரிழப்பு

(அடிஸ் அபாபா)

எதியோப்பியாவில் தனி நாடு கோரி போராடி வரும் டீக்ரே விடுதலைப் போராளிகள் மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் 5,600 போராளிகள் உயிரிழந்துள்ளதாக எதியோப்பியாவின் மூத்த இராணுவத் தளபதி பாச்சா தெபெலீ கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில், 'இறந்தவர்கள் தவிர, 2,300 போராளிகள் காயமடைந்திருப்பதாகவும், இரண்டாயிரம் பேர் பிடிபட்டிருப்பதாகவும் கூறியுள்ளார். ஆனால், எந்த காலகட்டத்தில் இந்த உயிரிழப்புகள் நேரிட்டன என்று அவர் தெளிவுபடுத்த வில்லை.டைக்ரே மாகாணத்தை எதியோப்பாவில் இருந்து பிரித்து தனி நாடாக உருவாக்க வேண்டும்என்ற நோக்கத்தோடு டைக்ரே கிளர்ச்சியாளர்கள் குழுவும், டைக்ரே மக்கள் விடுதலை முன்னனி கட்சியும் செயற்பட்டு வருகின்றன.

இந்த மோதலின் உச்சமாக கடந்த நவம்பர் மாதம், டைக்ரே மாகாணத்தில் இருந்த டைக்ரேயன்ஸ் சமூகத்தின் இராணுவ பிரிவினர் எதியோப்பியாவின் மத்திய அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கையில் இறங்கினர்.

மூன்று தசாப்தங்களாக எதியோப்பியாவை ஆட்சி செய்த டைக்ரே மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டாட்சி துருப்புக்களுக்கும் படையினருக்கும் இடையே நவம்பரில் தொடங்கிய போரினால், இதுவரை இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டதுடன் 50,000 இற்கும் மேற்பட்ட மக்கள் அண்டை நாடான சூடானுக்கு தப்பிச் சென்றுள்ளனர்.

அரசாங்கப் படைகளுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான இந்த சண்டையால் டைக்ரே பேரழிவிற்க உள்ளாகியுள்ளது. (7-4)

# மாயமான மாலுமிகள் உயிரிழந்ததாக அறிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் நடந்த ஹெலிகொப்டர் விபத்தில் மாயமான கடற்படையைச் சேர்ந்த 5 மாலுமிகள் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டு விமானம் தாங்கிக் கப்பலான யு.எஸ்.எஸ் ஆபிரஹாம் லிங்கன் கப்பலுக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் கடந்த செவ்வாய்க்கிழமை கலிபோர்னியாவின் தெற்குப் பகுதியில் பசுபிக் கடல் பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, இயந்திரக்கோளாறு காரணமாக விபத்தில் சிக்கியது.

இந்த விபத்தில் ஒருவர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில் 5 மாலுமிகள் மாயமாகினர்.

இந்நிலையில் காணாமல்போன 5 மாலுமிகளும் உயிரிழந்துள்ளதாக அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. (7-4)

# இலவசமாகவும் சடலங்கள் ஏற்றப்படுகின்றன

# தேவையுடையோர் தொடர்பு கொள்ளவும்

## கிளி.மாவட்ட நோயாளர் நலன்புரிச் சங்கம்

(அக்கராயன்)

**கிளிநொச்சி மாவட்ட நோயாளர் நலன்புரிச் சங்கம் கொவிட் 19 காரணமாக உயிரிழப்புகளுக்கு உதவிகள் அற்ற நிலை காணப்படுமானால் இலவசமாக சடலங்களை எரியூட்டுவதற்கான போக்குவரத்து வசதியினை வழங்கி வருகின்றனர்.**

கிளிநொச்சி மாவட்ட நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் தலைவரும் முன்னாள் கல்விப் பணிப்பாளருமான க.முருகவேல் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. கிளிநொச்சி மாவட்ட நோயாளர் நலன்புரிச் சங்கம் வசதியற்றவர்களுக்கு இலவசமாக சடலங்களை ஏற்றி இறக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ள துடன் ஏனைய வசதிகள் சிலவற்றையும் மேற் கொண்டு வருகின்றது.

கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் மட்டுமல்ல மாவட்ட நோயாளர் நலன் புரிச் சங்கம் என்ற அடிப்படையில் ஏனைய வைத்தியசாலைகளில் இருந்தும் சடலங்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

தற் போதைய சூழலில் சடலங்களை ஏற்றிஇறக்க வதில் வசதியீனங்கள் காணப்படுமானால் கிளி நொச்சி மாவட்ட நோயாளர் நலன்புரிச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் தெரிவித்தார். (7-4-6-350)

## உவர்நீர்த் தடுப்பணை அமைப்புப் பணி ஆரம்பம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி ஏ -32 வீதியின் மண்டைக்கல்லாறு பகுதியில் உவர்நீர் தடுப்பு சுவர் அமைப்பதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதி நீர்ப்பாசன பொறியியலாளர் இராஜகோபு தெரிவித்துள்ளனர்.

தமது விவசாய நிலங்களை பாதுகாக்கும் வகையில் உவர் நீர்த் தடுப்பணைகளை அமைத்து தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (7-4-315)

# நிதி கிடைக்கப் பெற்றதும் புனரமைப்பு பணிகள் ஆரம்பிக்கப்படும்

## வீதி அபிவிருத்தி திணைக்களம்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் பரந்தன் முல்லைத்தீவு ஏ 35 வீதியில் சுண்டிக்குளம் சந்தியிலிருந்து கல்லாறு கடற்கரைக்குச் செல்லும் சுமார் 16 கிலோ மீற்றர் நீளமான வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது . சுண்டிக்குளம் கடல் பகுதியில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தொழில் நடவடிக்கைகளுக்காக சென்று வருகின்ற அதேநேரம் கல்லாறு பிரமந்தனாறு புன்னை நீராவி கிராமங்களுக்கான மக்களும் இந்த வீதியை பயன்படுத்திவருகின்றனர்.

இந்த வீதி மக்கள் பயணிக்க முடியாத நிலையில் பாரிய குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் வீதிகள் அழிவடைந்தும் காணப் படுகின்றன. குறிப்பாக வீதிகளில் சில பகுதிகள் வெள்ள நீரினால் அடித்துச் செல்லப்பட்டும் காணப்படுகின்றது. இதனால் இவ் வீதியை பயன்படுத்தும் கடற்தொழிலாளர்கள் வியாபாரிகள் பொதுமக்கள் என பலரும் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றார்கள். எனவே குறித்த வீதியை புனர மைத்து தருமாறு தொழிலா ளர்களும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படி வீதிஅடிக்கடி வெள்ளப் பாதிப்புக்க உள்ளாகி வருவதனால் தரை மட்டத் திலிருந்து 4 மீற்றர் வரையான உயரத்துக்கு வீதியை உயரமாக புனரமைக்க வேண்டி உள்ளது. எனவே குறித்த வீதியை புனரமைப்பதற்கு சுமார் 1300 மில்லியன் ரூபா விற்கு மேற்பட்ட நிதி தேவை என்றும் அதற்கான நிதிகிடைக்கப் பெறும் பட்சத்தில் குறித்த வீதி புனரமைக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி திணைக் களம்தெரிவித்துள்ளது(7-4-6-35)

# செயலிழந்த நிலையில் காணப்படும் நல்லெண்ணெய் உற்பத்தி ஆலை



(முல்லைத்தீவு )

முல்லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்விளான் சிவபுரம் பகுதியில் துணுக்காய் பிரதேச செயலகத்தின் கைத்தொழில் அதிகார சபையினால் அரச சார்பற்ற நிறுவனமொன்றின் நிதி உதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு பிரதேச பெண்கள் அமைப்பு ஒன்றிடம் கையளிக்கப்பட்ட நல்லெண்ணெய் உற்பத்தி ஆலை இதுவரை பயன்படுத்தப்படாத நிலையில் செயல் இழந்து காணப்படுகிறது.

குறிப்பாக கிராம மட்ட பெண்கள் அமைப்புக்களை வலுப்படுத்தும் வகையிலும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டும் பெண்கள் மற்றும் பெண் தலைமைத் துவக் குடும்பங்களின் தொழில் வாய்ப்பு மற்றும் வருமானம் கருதி வழங்கப்பட்ட இத்திட்டமானது செயலிழந்து காணப்படுகின்றமை தொடர்பில் பல்வேறு தரப்பினரும் விசனம் தெரிவித்துள்ளனர்.(7-4-6-315)

# சிறுபோக செய்கையில் வரலாறு காணாத சாதனை

## மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர்

(தர்மபுரம்)

**கிளிநொச்சி மாவட்டத்தில் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் நான்கு பாரிய குளங்களும் ஐந்து நடுத்தர குளங்களும் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில் 2019 ஆண்டுக்கு முன்னர் 40% ற்கு குறைவாக காணப்பட்ட மாவட்டத்தின் சிறுபோக அளவானது இரணைமடு குளத்தின் புனரமைப்பின் பின்னர் 2019 இல் 68% ஆகவும் 2020 இல் 68.2% ஆகவும் இவ்வருடம் 2021 இல் 78.6% ஆக அதிகரித்துள்ளதாகவும் மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் எந்திரி த. இராஜகோபு தெரிவித்துள்ளார்.**

**இவ் அதிகரிப்பானது கிளிநொச்சி மாவட்ட வரலாற்றில் இதுவரை காணப்படாத உச்ச அடைவு மட்டமாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் இம் முறை இரணைமடு குளத்தின் கீழான சிறுபோக பயிர்ச்செய்கை 100% இடம்பெற்றுள்ளதை அறிய முடிவதாகவும் இவ் அடைவு மட்டமானது விவசாயிகளின் பங்களிப்புடன் மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் சிறப்பான நீர் முகாமைத்துவத்தின் மூலம் அடையப்பட்டுள்ளதாகவும் மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் தெரிவித்தார். (7-4-6-316)**

# சுகாதார பணியாளர்களை தனிமைப்படுத்த கிளி.சுற்றுலா விடுதியை வழங்க ஏற்பாடு



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் கொவிட் தொற்றுக்குள்ளான சுகாதாரப் பணியாளர்களை தனிமைப்படுத்தி தங்க வைப்பதற்கென கிளிநொச்சி மாவட்ட சுற்றுலா விடுதியை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மேற்கொண்டுள்ளார்

இதுதொடர்பாக மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் சுகந்தன், விடுத்த வேண்டுகோளுக் கமைவாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிஏ9 வீதியில், புதிய பேருந்து நிலையம் மற்றும் கனகபுரம் சந்திக்கு அருகில் அமைந்துள்ள சுமார் 15 அறைகளைக் கொண்ட சுற்றுலா விடுதி இதற்கென பிரத்தியேகமாக தற்போது வழங்கப்பட்டு அதனை வைத்தியசாலை நிர்வாகம் பொறுப்பேற்றுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் இது வரை 52 வரையிலான சுகாதாரத்துறைப் பணியாளர்கள் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.

மருத்துவர்கள், தாதியர் உட்பட கொவிட் தொற்றுக்குள்ளானவர்களில் வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களைப் பாதுகாப்பாக தனிமைப்படுத்தித் தங்கவைப்பதற்காகவே இந்த வசதியை பிரத்தியேகமாக வைத்திய சாலை பணிப்பாளர் கோரி யிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(7-4-6-315)

# புலிகளை ஒழித்தது போல் இஸ்லாமிய பயங்கரவாதிகளையும் ஒழிக்க வேண்டும்

**(கொழும்பு) இஸ்லாமிய பயங்கரவாதிகள் மீண்டும் தலைதூக்க முயல்வதை கண்காணிக்கும் நடவடிக்கையை பொலிஸார் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும் என பொது பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.**

உள்நாட்டு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக இஸ்லாமிய பயங்கரவாதிகளின் எழுச்சியை கண்காணிக்கும் விடயத்தில் பொலிஸார் மேலதிக விழிப்புணர்வுடன் செயற்பட வேண் டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

உள்நாட்டு பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தலாக காணப்பட்ட விடுதலைப் புலிகளை ஒழிப்பதில் பொலிஸார் பெரும் சேவையை ஆற்றினர் என்றும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஐ.எஸ்.ஐ.எஸ் என்பது ஒரு கொள்கை என்றும் அந்தக் கொள்கையால் ஈர்க்கப்பட்ட ஒருவரை அடையாளம் காண்பது கடினமாகும் என்றும் சரத் வீரசேகர தெரிவித்தார். (நி-5)

# பிரபல பாடகர் சுனில் பெரேரா காலமானார்



பிரபல பாடகரும், ஜிப்ஸி இசைக்குழுத் தலைவருமான சுனில் பெரேரா, தனது 68 ஆவது வயதில் காலமானார்.

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே நேற்று உயிரிழந்துள்ளார்.

கடந்த மாதம் சுனில் பெரேராவுக்கு கொவிட்-19 தொற்று இருப்பது கண்டறியப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் அவர் குணமடைந்த நிலையில் வைத்தியசாலையிலிருந்து வெளியேறியிருந்தார்.

இந் நிலையில் திடீர் உடல் நலக்குறைவு காரணமாக அவர் நேற்றைய தினம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (நி-5)

# சுகாதார விதி மீறல் இதுவரை 66,003 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய 273 பேர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முகக்கவசம் அணியாமை மற்றும் சமூக இடைவெளியை பேணாமை ஆகிய குற்றச்சாட்டுகளுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

இதன்போது 53 வாகனங்களும் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் தொடக்கம் இது வரையான காலப்பகுதியில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் இதுவரை 66,003 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி-5)

# ஜோர்ஜ் மாஸ்ரருக்கு சொல்ஹெய்ம் இரங்கல்



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் துறை பிரதான மொழிபெயர்ப்பாளராக விளங்கிவந்த ஜோர்ஜ் மாஸ்டர் அல்லது தம்பிஅப்பா என்றழைக்கப்பட்ட வேலுப் பிள்ளை குமார் பஞ்சரட்ணம் மறைவுக்கு நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் இரங்கல் தெரிவித்துள்ளார்.

சமாதான பேச்சு வார்த்தைகளின்போது நாங்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர்களைச்சந்திக்கும்போதெல்லாம் எங்களுக்காக சிறந்த மொழிபெயர்ப்பாளராக ஜோர்ஜ் மாஸ்டர் பணியாற்றினார்.



அவர் மிகுந்த தமிழ் தேசப் பற்றாளர். சமாதானத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தவர். அவரது ஆத்மா சாந்தியடையட்டும் எனவும் எரிக் சொல் ஹெய்ம் தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். (நி-5)




கீர்த்தி




வேணுசா



விது




அபி




டிஜா




பொபித்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# பயங்கரவாத தடைச் சட்டம் ரத்து செய்யப்பட வேண்டும்

### சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழு கோரிக்கை

**(கொழும்பு)**

**இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவளிக்க வேண்டும் என சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழு கோரிக்கை விடுத்துள்ளது.**


பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் நீண்ட காலம் தடுத்துவைக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள் நீதியைப் பெற்றுக்கொள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆதரவு கோரி சிறைக் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழு கடிதம் ஒன்றைஅனுப்பியுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்தல், நீதிமன்றங்களில் முன்னிறுத்தப்படாமல் நீண்ட காலம் தடுத்து வைத்தல், நீண்ட கால விசாரணைகள் போன்றவற்றால் பல கைதிகள் மற்றும் அவர்களின் உறவுகள் மிகுந்தமன உளைச்சலுக்கும் வேதனைக்கும் உள்ளாகியுள்ளனர்.

தற்போதைய அரசாங்கம் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்படும் என உறுதியளித்துள்ளது. எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தில் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைத் தொடர்ந்து பெற்றுக்கொள்ளவும் ஐ.நா. மனித உரிமைகள்பேரவை 48ஆவது கூட்டத்தொடரை கருத்தில் கொண்டுமே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளதாகக் கருதப்படுகிறது. இது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் சர்வதேச சமூகதின் மத்தியில் இருந்து இந்த விவகாரத்தை தந்திரமாக மறைக்கும் முயற்சியா? என்ற சந்தேகமும் ஏற்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜிஎஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்குவதற்கான மீளாய்வின்போது பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்வதற்கான இலங்கையில் வாக்குறுதி நிறைவேற்றப்படுவதை ஐரோப்பிய ஒன்றியம்உறுதி செய்ய வேண்டும் எனவும் சிறைக்கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் குழு வலியுறுத்தியுள்ளது.(நி-5)

# ஒரு லட்சம் பைசர் தடுப்பூசிகள் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டன



(கொழும்பு)

அமெரிக்காவிடம் இருந்து அரசாங்கத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட மேலும் ஒரு லட்சம் பைசர் தடுப்பூசிகள் நாட்டிற்குகொண்டுவரப்பட்டுள்ளன.

நெதர்லாந்தில் இருந்து கட்டார் டோஹா நகருக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் அங்கிருந்து கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த தடுப்பூசிகள் நேற்று அதிகாலை 1.45 அளவில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாக விமான நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (நி-5)

# நாட்டை மீள திறப்பதற்கு முன்னர்

## பொதுப்போக்குவரத்து தொடர்பான திட்டமிடல் அவசியம்

(கொழும்பு)

நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள நிலையில் மீள நாடு திறக்கப்படுமாயின் அதற்கு முன்னர் பொதுப் போக்குவரத்துக்கான தீர்மானிக்க வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட வேண்டும் என இலங்கை மருத்துவ சங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அதன் தலைவர் வைத்தியர் பத்மா குணரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

அவ்வாறு இடம்பெறாதவிடத்து நாடு மீள பிரச்சினைக்குள் செல்ல நேரிடும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தொற்று வேகமாக பரவுவதற்கு பொதுப் போக்குவரத்து சேவை காரணமாக உள்ளது.

இந்தநிலையில் மக்கள் ஒன்று கூடுவதையும், தொற்று பரவுவதையும் தடுக்கும் வகையில் இந்த செயற்பாடு அமைய வேண்டும்.

நாடு மீள திறக்கப்படுவதற்கு முன்னர் இந்த செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் மக்கள் ஒன்றுகூட கூடிய இடங்கள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## தியானம் செய்யும் மாயம்!

ஒரு வயதான பெரியவர். தன்னுடைய ஒன்பது வயது மகனை (குருட்ஜீப்) அழைத்தார். "மகனே! உனக்காக இந்த உலகப் பொருட்கள் எதையும் நான் விட்டுட்டுப் போகவில்லை! ஆனாலும் நான் உன்னிடம் சொல்வதற்கு ஒரு முக்கியமான செய்தி இருக்கின்றது! அதைத்தான் நான் உன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நினைக்கின்றேன்.

அது என்னுடைய அப்பா. அவருடைய கடைசி காலத்திலே என்னிடம் ஒப்படைத்து விட்டுப் போன செய்தி! வாழ்க்கையிலே அது எனக்கு மிகவும் உபயோகப்பட்ட ஒரு கருத்து எங்கள் அப்பா என்னிடம் கொடுத்த பொக்கிஷம் அது. அதை இப்போது நான் உன்னிடம் கொடுக்கின்றேன்.

இப்போது உனக்கு இது புரியாது ஏன் என்றால் இன்னும் நீ பெரிய மனிதன் ஆகவில்லை! ஆனாலும் இப்போது நான் உன்னிடம் கொடுக்கின்றதை நீ பத்திரமாக வைத்திரு பிற்காலத்தில் அது உனக்கு உபயோகப்படும்! இது ஒரு திறவுகோல் மாதிரி! பெரிய பெரிய பொக்கிஷங்களின் கதவுகளை இது திறந்துவிடும்!" என்று சொல்லி விடயத்தைச் சொன்னார்.

மகனுக்கு அந்த விடயம் அப்போது புரியவில்லை. ஆனாலும் பிற்காலத்தில் அது தான் அவருடைய வாழ்க்கையை மாற்றி அமைத்தது! சரி அப்பா சொன்ன செய்தி என்ன? அது ஒன்றும் பெரிய விடயமில்லை. எளிமையான ஒரு கருத்துத்தான்.

அவர் என்ன சொன்னார் என்றால் மகனே! யாராவது உன்னை மனம் நோகும் படி செய்தால் அதைப்பற்றி 24 மணிநேரத்திற்குத் தியானம் செய்யப் போகிறதாகவும் அதற்குப்பிறகு பதில் சொல்வதாகவும்சொல்லி விடு! அவ்வளவு தான்! என்றார். யாராவது நம்மைத் திட்டினால் உடனடியாக பதில் சொல்லக்கூடாது. இரு இதைப்பற்றி யோசிக்கின்றேன். இதற்கு நாளைக்குப் பதில் சொல்லுகிறேன்! என சொல்லி விட வேண்டும் அவ்வளவு தான்.

சின்ன வயதிலே இது என்ன அப்படிப்பட்ட ஒரு பெரிய இரகசியமா என்று தான் தோன்றும். அந்தப் பையனுக்கும் இப்படித்தான் தோன்றியது! ஆனாலும் அப்பா சொன்ன கடைசி வாசகம் அது என்பதனால் அது அப்படியே அவர் மனதிலே பதிந்து போய் விட்டது.

அந்த இளைஞர் ஓர் பெரியவரானார். அவரை ஒருத்தர் அவமானப்படுத்தினார். உடனே இவர் சொன்னார். ஐயா! இதைப்பற்றி நான் 24 மணிநேரம் தியானிக்க வேண்டும். அப்படித்தான் எங்கள் அப்பா எனக்குச் சொன்னார். அவர் இப்போது இல்லை. அவர் பேச்சுக்கு மதிப்பு கொடுக் வேண்டியது என் கடமை. எனவே தயவு செய்து மன்னியுங்கள். 24 மணி நேரம் பொறுத்து திரும்பி வந்து உங்களுக்குப் பதில் சொல்லுகிறேன் என்றார்.

அவர் தியானம் செய்தார். அது அவருக்குள்ளே சில தெளிவுகளை ஏற்படுத்திவிட்டது. சில நேரங்களிலே அந்த அவமதிப்பு சரிதான் என்று கூட தோன்றியது. மறுநாள் அந்த ஆளிடம் போனார். ஐயா நன்றி! நீங்கள் சொன்னது சரிதான். அது ஒரு அவமதிப்பு அல்ல! உண்மையான பேச்சு தான். நீங்கள் என்னை முட்டாள் என்று சொன்னீர்கள். யோசித்துப் பார்க்கின்ற போது அது சரி தான் என்று தோன்றியது. நான் அப்படித்தான் இருக்கின்றேன் என்றார்.

சிலசமயம் இது மாதிரி யோசிக்கின்ற போது அந்த அவமதிப்பு ஒரு பொய் என்று புரியும் அதுவே பொய் என்கிற போது அதற்காக நாம் ஏன் மனம் புண்பட வேண்டும் என்று நினைப்பார். அது மட்டுமல்ல அது ஒரு பொய் என்று சொல்வதற்குக் கூட அந்த ஆளிடம் போக மாட்டார்.

பொய் என்றால் அது பொய் தானே! அதற்காக ஏன் கவலைப்பட வேண்டும்? கவனிக்கிறது மூலமாகவும் தியானிக்கிறது மூலமாகவும் மெல்ல மெல்ல அவர் மற்றவர்களின் செயல்களை விடவும் தன் எதிர் வினைகளின் மீது தான் அளவு கடந்த விழிப்புணர்வு கொண்டவராக மாறினார் என்கிறார் ஓசோ.

தியானம் என்கிறது ஒரு எளிதான புரிந்து கொள்ளல் மட்டும் தான் என்கிறார் அவர். மௌனமாக உட்கார்ந்திருப்பதல்ல தியானம். மந்திரத்தை ஓதிக் கொண்டிருப்தல்ல தியானம்.

மனதின் நுண்ணிய வேலைத் தனங்களைப் புரிந்து கொள்வது தான் தியானம் அப்படிப் புரிந்து கொள்கின்ற போது நமக்குள்ளே ஒரு மாபெரும் விழிப்புணர்வு பிறக்கும்.

அது மனதிலேயிருந்து பிறப்பதில்லை. ஆன்மாவிலிருந்தும் பேரறிவிலிருந்தும் பிறக்கும். இதுதான் பெரியவர்கள் சொல்லியிருக்கின்ற முக்கிய கருத்து.

இந்தக் காலத்திலேயும் ஒரு அப்பா இருந்தார். கடைசி காலத்திலே மகனைக் கூப்பிட்டார். மகனே உனக்காக நான் விட்டுட்டுப் போறது இந்தப் பெட்டி தான் இது எங்கள் அப்பா என்னிடம் ஒப்படைத்துவிட்டு போனது அதை உன்னிடம் ஒப்படைக்கின்றேன்.

நான் இந்த உலகத்தை விட்டுட்டுப் போன பிறகு இதைத் திறந்து பார். இந்தா அதற்கான திறவுகோல் என்று கொடுத்து விட்டு கண்ணை மூடி விட்டார்.

கொஞ்ச நாள் கழித்து பெட்டியைத் திறந்து பார்த்தார். பெட்டியிலே இருந்தது என்ன தெரியுமா? நம் குடும்பத்திற்காக தாத்தா காலத்திலேயிருந்து யார் யார் கிட்ட எவ்வளவு கடன் வாங்கியிருக்கின்றோம் என்கிற விவரப் பட்டியல்




# லட்சுமி கடாட்சம்

கத்தியை எடுத்து அரசரின் கழுத்தில் வைத்தார்முனிவர்.

உடனே கண் விழித்தான் அரசன், “இப்படிப்பட்ட பாதகச் செயலை நீங்கள் செய்வீர்கள் என்று நான் சிறிதும் நினைக்கவில்லை,” என்று கோபப்பட்டான்.

முனிவரோ, “மன்னா நான் உன்னை கொல்ல வேண்டுமென்றால் எப்பொழுதோ கொன்றிருக்கலாம். சற்று தலையைத் தூக்கிப் பாருங்கள்.

கருடன் வாயிலிருக்கும் பாம்பின் வாயிலிருந்து ஒரு துளி விஷம் உங்கள் கழுத்தில் விழுந்துவிட்டது. அதை எடுக்கவே இப்படிச் செய்தேன்.

இனி நான் உங்களுடன் இருக்கமாட்டேன். லட்சுமி கடாட்சம் என்னை விட்டு போய் விட்டது,” என்றார்.

மன்னன் மிகவும் மன்னிப்பு கேட்டான். தாங்கள் என்னை விட்டு செல்லக்கூடாது என கூறினான்.

நடந்தவைகளை எல்லாம் கூறிய முனிவர், “எனக்கு என்ன இருக்கிறது. நான்ஒரு முனிவர். லட்சுமி என்னுடன் இருந்தவரையில் எனக்கு ஆபத்து இல்லை.



இனி நான் தங்களுடன் இருப்பதில் பயனில்லை. விடை கொடுங்கள் நான் காட்டிற்கு செல்கிறேன்”என்றார்.

மன்னன்எவ்வளவோ கெஞ்சியும் முனிவர் அவருடன் இருக்க சம்மதிக்கவில்லை.

தன்னை விட்டு லட்சுமி போன பிறகு மன்னனுடன் இருப்பது தனக்கு மிகுந்த ஆபத்தை தரும் என்பதை உணர்ந்து அரசனிடம் விடைபெற்று காட்டிற்கு சென்றார் முனிவர். (முற்றும்)

# மகாபாரதம்




**நண்பன்.. பகைவன்.. சுற்றம்..**

தருமர், பீஷ்மரிடம் “கங்கை மைந்தா மனிதன் பிறரின் உதவியின்றி சிறிய செயலையும் செய்வது அரிதாக இருக்கிறது.

அப்படியுள்ள போது பிறர் உதவியின்றி அரசாள்வது எப்படி? அரசனுக்கு உதவி செய்யும் மனிதன் எத்தகைய ஒழுக்கம் உள்ளவனாக இருக்க வேண்டும்? அரசன் எப்படிப்பட்டவனுடன் நம்பிக்கை வைக்கலாம், எவன்நம்பத்தகாத வன்” என்றெல்லாம் வினவினார்.

பீஷ்மர் சொல்கிறார் “அரசர்களுக்கு சகார்த்தன் (இந்தச் செயலைச் செய்து இதன் பயனை இருவரும் அடைவோம் என்று பேசிக்கொண்டு சேர்க்கப்பட்டவன்.) பஜமானன் (தகப்பன், பாட்டன்எனபரம்பரை பரம்பரையாய் உதவி செய்பவன்), சகஜன் (உறவினன்), கிருத்திரிமன் (உதவிசெய்து ஏற்படுத்தப்பட்டவன்) எனநான்கு வகை நண்பர்களுண்டு.

நடுவு நிலைமை குன்றாதவன் ஐந்தாம் நண்பன். அவன் யார் பக்கமும்சாராமல் அறம் உள்ள இடத்தையே சார்ந்திருப்பான்.

தருமத்தை விரும்பும் அரசர் அவனை நாடலாம். ஆனால் அவனுக்குத் தொடர்பில்லா விடயத்தை அவனிடம் சொல்லக் கூடாது.

அரசன் வெற்றி ஒன்றையே குறிக்கோளாக உடையவன். அவன் சில நேரங்களில் அறம், மறம் இரண்டையுமே கைக்கொள்ள நேரிடும். நட்பு,பகை என்பவை எப்போதும் ஒருவனிடம் இயற்கையாக அமைந்தவை அல்ல.

ஒருவன் உப காரத்தால் நண்பன் ஆவதும் அபகாரத்தால் பகைவன் ஆவதும் இயல்பு.

மேற்கூறிய நான்கு விதமான நண்பர்களில் இடையில் கூறிய பஜமானனும், சகஜனும் உத்தமர்கள். மற்ற இருவரும் சந்தேகத்திற்கு உரியவர்கள்.

அரசன் தானே நேரில் தன் பார்வையிலேயே நடத்தக்கூடிய செயலை மேற்சொன்ன ஐவரை நம்பி ஒப்படைக்கக் கூடாது.

நண்பர்களிடம் அரசன் எப்போதும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

கவனக் குறைவாக இருக்கும் அரசனை மக்கள் மதிக்க மாட்டார்கள். அவமதிப்பார்கள்.

(தொடரும்)

> தந்திரமும் ஏமாற்றமும் அறநெறி நிற்கப் போதுமான அறிவில்லாத மூடர் செயலாகும்.
>
> – ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இவர்களால் எங்கள் இனத்துக்கு ஏதேனும் ஆகுமா?

தமிழ் மக்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் எனத் தந்தை செல்வநாயகம் அவர்கள் கூறியிருந்தார்.

தந்தை செல்வா கூறிய மேற்போந்த வாசகத்தைப் பலரும் பல தடவைகள் மீளக் கூறியுள்ளனர்.

ஆயினும் தமிழ் மக்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமெனத் தந்தை செல்வநாயகம் கூறியதற்கு; சிங்கள ஆட்சியாளர்கள் தமிழ் மக்களுக்கு எதுவும் தரமாட்டார்கள்.

எனவே இனித் தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமெனப் பொருள் கொள்ளப்பட்டது.

ஆனால், அந்த நிலைமை இப்போது மாறியுள்ளது.

அதாவது தமிழ் அரசியல் தலைவர்கள் மிக மோசமாக நடந்து கொள்வார்கள். அவர்கள் ஒருபோதும் ஒற்றுமைப்படமாட்டார்கள். இவர்களிடம் இருந்து தமிழ் மக்கள் தப்பித்துக் கொள்வதே பெரும்பாடாக இருக்கும்.

எனவேதான் தமிழ் மக்களை இனிக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமெனத் தந்தை செல்வா கூறினார் எனப் பொருள் கொள்வது தான் பொருத்துடையது.

ஆம், வன்னிப் பெருநிலப்பரப்பில் பெரும் போர் நடந்து பன்னிரெண்டு ஆண்டுகள் கடந்து விட்டன.

தமிழின அழிப்பாக நடந்த அந்தக் கொடும் யுத்தத்தில் நடந்த போர்க்குற்றங்களை சர்வதேச விசாரணைக்கு உட்படுத்த வேண்டும் என்பதில்கூட எங்கள் தமிழ் அரசியல் தரப்புகளிடம் ஒரு வலுவான முன்னெடுப்பு இருக்கவில்லை.

இப்போதுகூட, ஆளுக்கு ஆள் ஒவ்வொரு பக்கமாக நிற்கின்றனர்.

இதில் விடுதலைப் புலிகள் போர்க்குற்றம் இழைத்ததாக நாமே பிரேரித்து நாமே வழிமொழிய வேண்டுமென்ற குரோதத்தனங்களும் எங்களுக்குள் இருக்கின்றது எனும் போது, தமிழ் மக்களுக்கு எங்ஙனம் உய்வு கிடைக்கும்.

2009ஆம் ஆண்டில் நடந்த இறுதிப் போரில் விடுதலைப் புலிகள் இல்லாது போயினர்.

மாறாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என இலங்கை ஆட்சியாளர்கள் கூறிய போதிலும் அதில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர்.

வன்னிப் போரில் தமிழ் மக்களுக்கு எதிராக போர்க் குற்றங்கள் இழைக்கப்பட்டதனை சனல் 4 ஆவணப்படுத்தி அதனை வெளிப்படுத்தியும் உள்ளது.

ஆக, போர்க்குற்றம் இழைத்த தரப்பும் அவர்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தொடர்பிலுமே விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதைவிடுத்து தற்போது இல்லாத விடுதலைப்புலிகள் அமைப்பு போர்க்குற்றம் புரிந்த தான கருத்துக்களை தமிழ் அரசியல் தரப்பு முன்வைப்பதென்பது எங்கள் தலையில் நாங்களே மண்ணைக் கொட்டுவதற்கு ஒப்பானதாகும்.

ஆக, அரச தரப்பு தன்னையும் படைத் தரப்பையும் காப்பாற்றுவதில் கங்கணம் கட்டி நிற்க, நம்மவர்களோ எங்களை குற்றவாளிகளாக்க முற்படுகின்றனர் எனும்போது இவர்களால் தமிழ் மக்களுக்கு ஒருபோதும் விமோசனம் கிடைக்கமாட்டா என்பது நிறுதிட்டமான உண்மை.

இங்குதான் தமிழ் மக்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்ற வார்த்தை பொருள்படுகிறது.

# அவசரகாலச் சட்டம் மூலம் பாரிய உணவுத் தட்டுப்பாடு

## கபீர் ஹசீம் எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

பொருளாதாரத்தை சீர்செய்வதற்காக சுற்றுலாப் பயணிகளை மீண்டும் நாட்டிற்குள் வரவழைப்பதற்கு முயற்சிக்கும் அரசாங்கம், மறுபுறம் அவசரகாலச் சட்டத்தைப் பிறப்பித்திருப்பதன் ஊடாக நாட்டில் பாரிய உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது என்ற நிலைப்பாட்டையே சர்வதேசத்தின் மத்தியில் தோற்றுவித்திருக்கின்றது.

உணவுப்பொருட்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்ற நாட்டிற்கு விஜயம் செய்வதற்கு எந்தவொரு வெளிநாட்டவரும் விரும்பமாட்டார்கள் என்பதை அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹசீம் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்நிலையில் தற்போது அரசாங்கத்தினால் பின்பற்றப்பட்டு வரும் முறையற்ற கொள்கைகள் திருத்தியமைக்கப்படாவிட்டால், எதிர்வரும் டிசம்பர் மாதமளவில் டொலருக்கெதிரான ரூபாயின் பெறுமதி 250 ரூபாய்வரை வீழ்ச்சியடையும் என்றும் அவர் மேலும் எச்சரித்துள்ளார். (ம-3)

# 20 முதல் 29 வயதுடையவர்களுக்கு பைஸர் செலுத்துவது தொடர்பில் அவதானம்

(கொழும்பு)

நாட்டில் 20 முதல் 29 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு பைஸர் தடுப்பூசியை செலுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்படவுள்ளது என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தொற்றுநோய் குறித்த ஆலோசனைக்குழுவின் பரிந்துரைக்கமைய சுகாதார அமைச்சு, எதிர்காலத்தில் தீர்மானம் மேற்கொள்ளும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சினோபார்ம் தடுப்பூசி மூலம் மிகவும் சிறந்த நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகக்கூடிய 20-29 வயதுக்கு இடைப்பட்ட வயதுப் பிரிவினருக்கு, பைஸர் தடுப்பூசியைச் செலுத்துவதானது முறையற்றது என்றும் இது விஞ்ஞானபூர்வமான தரவுகளை மீறும் செயல் என்றும் விசேட வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் 20-29 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு பைஸர் தடுப்பூசி வழங்குவதற்கான யோசனை அடங்கிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்துக்கு பதிலளிக்கும் வகையில் அச்சங்கத்தினால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிவித்தலில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

### யாழ். மாவட்டத்தின்

# காணிப் பதிவகத்தின் செயற்பாடுகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட காணிப் பதிவகத்தின் செயற்பாடுகள் நேற்று திங்கட்கிழமை முதல் மட்டுப்படுத்தப்பட்டளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் க.மகேசன் அறிவித்துள்ளார்.

சேவையின் அவசர அவசியத்தன்மை கருதி காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை தொலைபேசி இலக்கமான 021222 5681 உடன் தொடர்பு கொண்டு முற்பதிவினை மேற்கொண்டு சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3,18,33,104)

# உடுவில் வைத்திய அதிகாரி பிரிவில் 42 பேருக்கு கொரோனா தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 42 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ் .போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 71 பேருக்கு பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதில் 42 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## இலட்சியத்தில் உறுதி வேண்டும்

❖ சுயநலநோக்கத்துடன் செயல்படும்போது நம் ஆற்றல் அனைத்தும் சிதறி வீணாகின்றன. ஆற்றல் உங்களிடம் திரும்பி வருவதற்கான வழி சிறிதும் இல்லை.

❖ உங்கள் இதயத்தில் ஒரு வெட்டவெளி இருப்பதாக நினையுங்கள். அதில் சுடர் ஒன்று ஒளிவீசிப் பிரகாசிப்பதாக எண்ணி தியானத்தில் ஆழ்ந்து விடுங்கள்.

❖ மனம் என்னும் கடிவாளத்தை உறுதியாகப் பிடித்து உடலையும், புலன்களையும் நல்வழியில் நடத்திச் செல்வதே தவம்.

❖ ஒருமுகத்தன்மையுடன் ஒருசெயலில் ஈடுபடப் பழகினால் உடலுக்கு புத்துணர்வு உண்டாகும்.

❖ சிறிது நேரம் பழகினாலும் கூட நல்லவர்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். அந்த தொடர்பால் பிறவிக்கடலைக் கடக்கும் வழி கிடைக்கும்.

❖ ஒரு குறிக்கோளைத் தேர்ந்தெடுங்கள். அதைப் பின்பற்றுங்கள். முடிவை எட்டும் வரை விட்டு விடாதீர்கள். லட்சியத்தில் உறுதி இருந்தால் வெற்றி நிச்சயம் கிடைக்கும்.

# மாகாண சபைத் தேர்தல்கள்

29

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



மேற்குறித்த அறிக்கைகளின் மூலம் ஏதேனும் வன்முறை நிகழ்வொன்று தொடர்பாக அறிவிக்கப்பட்டிருப்பின், தெரிவத்தாட்சி அலுவலரால் அது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவித்து அவ்வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்கெடுப்பு வறிதாக்கப்படல் வேண்டுமா? இல்லையா? என அவரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

ஏதேனும் வன்முறை காரணமாக வாக்கெடுப்பை நீதியாகவும் அமைதியாகவும் நடத்திச் செல்ல இடையுறு இருந்திருப்பதாக அவ்வறிக்கைகள் மூலம் தெரியவரின், உரிய வாக்கெடுப்பு நிலையத்தின் வாக்கெடுப்பு வறிதாக்கப்படின் மீண்டும் அவ்வாக்குச் சாவடிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படுவது கட்டாயத் தேவைப்பாடென்பதோடு, அவ்வாக்கெடுப்பின் முடிவுகளை முந்திய முடிவுகளோடு சேர்த்து இறுதி முடிவு தயாரிக்கப்படும்.

இத்தேர்தலில், வடமேல் மாகாண சபையின் புத்தளம் மாவட்டத்தின் புத்தளம் வாக்கெடுப்புப் பிரிவுக்குரிய இல. 47 நாயக்கர் சேனை தமிழ் வித்தியாலய வாக்கெடுப்பு நிலையத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பு நேர்மையான முறையில் நடைபெறவில்லையென தெரிவத்தாட்சி அலுவலரின் விளம்பலுக்கிணங்க தகவல் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அவ்வாக்கெடுப்பு வறிதாக்கப்பட்டமையால் வடமேல் மாகாணசபையின் முடிவுகளை வெளியிடும் நடவடிக்கை தாமதித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

### வாக்கெண்ணல் செயன்முறை

வாக்கெண்ணல் செயன்முறை மூன்று கட்டங்களைக் கொண்டது. (1) ஒவ்வொரு வாக்குப் பெட்டியிலுமுள்ள வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை வாக்குச் சீட்டுக் கணக்கோடு சமப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளல். (2) ஒவ்வொரு கட்சி மற்றும் சுயேச்சைக் குழு பெற்றுக் கொண்டுள்ள வாக்குகளைக் கணக்கெடுத்தல் (3) ஒவ்வொரு வேட்பாளரும் பெற்றுள்ள விருப்புக்களை எண்ணல்.

வாக்கெண்ணல் முதல் கட்டத்தில் வாக்கெண்ணல் நிலையத்திற்குரிய அனைத்து வாக்குப் பெட்டிகளையும் வாக்கெண்ணல் முகவர்களுக்கு பரிசீலிப்பதற்கு இடமளித்தலும் அதன் பின்னர் ஒவ்வொரு வாக்குப் பெட்டியையும் வெவ்வேறாகத் திறந்து வாக்குப் பெட்டியிலுள்ள வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை உரிய வாக்கெடுப்பு நிலையத்தின் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலரினால் தயாரிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்கள் கணக்கோடு சமப்படுகின்றதாவென பரிசீலிக்கப்படுகின்றது. வாக்கெண்ணலின் முதலாம் கட்ட இறுதியில் அனைத்து வாக்குப் பெட்டிகளிலுமுள்ள வாக்குச் சீட்டுக்கள் பெரிய பெட்டிக்குள் இடப்பட்டு கலக்கப்பட்டதன் பின்னர் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது.

வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டத்தில் ஒவ்வொரு வாக்குச் சீட்டையும் விடுத்து வாக்கு எந்தக் கட்சிக்கு அல்லது எந்தக் குழுவிற்கு வாக்களிக்கப்பட்டுள்ளதெனப் பரிசீலித்து வேறு பிரிக்கப்பட்டதன் பின்னர், ஒவ்வொரு கட்சிக்கும் அல்லது குழுவிற்கும் உரித்தான வாக்குச் சீட்டுக்களை வெவ்வேறாக ஐம்பதுகள் கொண்ட கட்டுக்களாக ஒன்று சேர்த்து இறப்பர் வார் இடப் படலும், அதன் பின்னர் ஒவ்வொரு கட்டிலுமுள்ள வாக்குச் சீட்டுக்கள் ஒரே கட்சிக்கு/குழுவுக்கு அளிக்கப்பட்ட வாக்குச் சீட்டுக்களா? எனவும் வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கை 50 என்பது சரியானது தானா? எனவும் பரிசீலிக்கப்படும். அதையடுத்து அவ் ஒவ்வொரு வாக்குச் சீட்டுக் கட்டிலும் உள்ள வாக்குச்சீட்டுக்களை மீண்டும் எழுமாற்றாக பரிசீலித்து 50 கொண்ட 10 கட்டுக்கள் வீதம் ஒன்று சேர்த்து 500 கொண்ட கட்டுக்களாக கட்டப்படும். வாக்கெண்ணலின் இரண்டாம் கட்டத்தின் ஈற்றில் உரிய வாக்கெண்ணல் நிலையத்துக்கமைய ஒவ்வொரு கட்சியும் சுயேச்சைக் குழுவும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை இலக்கத்திலும் மற்றும் எழுத்திலும் குறிக்கப்பட்டதன் பின்னர் அந்தக் கூற்று பெறுபேறுகள் தயாரிக்கப்படும் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்படும். பெரும்பாலும் இந் நடவடிக்கைகள் முடிவடைகின்ற போது நள்ளிரவும் தாண்டப்படுவது வழக்கம். சில நிலையங்களில் விடியும் வரை நீண்டு செல்லும்.

எல்லா வாக்கெண்ணல் நிலையங்களிலிருந்தும் பெறப்பட்ட இம் முடிவுகளிலிருந்து ஒவ்வொரு மாவட்டத்திலுமிருந்து ஒவ்வொரு கட்சி / குழு பெற்ற மொத்த வாக்குகள் கணிக்கப்பட்டு அதிலிருந்து ஒவ்வொரு கட்சிக்கும்/குழுவுக்கும் கிடைக்கும் ஆசனங்களின் எண்ணிக்கை கணிக்கப்படும்.

இத் தேர்தலில் மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (A), அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (B), நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை(C), செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை (D) அட்டவணை 17இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 17 மத்திய, வடமேல் மாகாணசபைகளுக்கானதேர்தல்கள் - 2009 வாக்களிப்பு

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| மத்திய மாகாணம் | 1,746,449 | 1,167,336 | 75,171 | 1,092,165 |
| வடமேல் மாகாணம் | 1,661,733 | 1,009,860 | 46,714 | 963,146 |

### வாக்கெண்ணலின் மூன்றாம் கட்டம்

வாக்கெண்ணலின் மூன்றாம் கட்டம் யாதெனில், ஒவ்வொரு கட்சியினதும் மற்றும் சுயேச்சைக் குழுவினதும் வேட்பாளர்கள் பெற்றுக்கொண்ட விருப்புக்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்தலாகும். இம் மாகாண சபைத் தேர்தல்களில் இதுவரை நடைபெற்ற நடைமுறைக்கு மாற்றமாக விருப்புகள் எண்ணப்பட்டன.

அதாவது ஏதேனும் உறுப்பினர் எண்ணிக்கை தகைமை பெற்ற கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் என்பவற்றின் விருப்புகள் மாத்திரமே எண்ணப்பட்டன. விருப்புக்களை எண்ணுவதன் அடிப்படை எதிர்பார்ப்பு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற வேட்பாளர்கள் யாவர் என இனங்கண்டு கொள்வதாதலால், உறுப்புரிமை ஒன்றிற்கேனும் தகைமை பெறாத கட்சிகளினதும் மற்றும் குழுக்களினதும் விருப்பு களை எண்ணுவது அர்த்தமற்ற செயலாகும். மத்திய மற்றும் வட மேல் மாகாண சபைகளின் தேர்தல்களின் போது முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட இந் நடைமுறை, அதன் பின்னர் நடைபெற்ற அனைத்து மாகாண சபைத்தேர்தல்களின் போதும் செயற்படுத்தப்பட்டது.

மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தல்களில் சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை மற்றும் விருப்புக்களை எண்ணுவதற்கு தகைமை பெற்ற வேட்பு மனுக்களின் எண்ணிக்கை என்பவை அட்டவணை 18 இல் காட்டப்பட்டுள்ளன.

### மத்திய மற்றும் வடமேல் மாகாண தேர்தல்கள் முடிவுகள் -2009

அட்டவணை 18- விருப்பு வாக்குகள் எண்ணல் (2009)
மத்திய, வடமேல் மாகாண சபைகள்

| மாகாண சபை | மாவட்டம் | A | | B | |
|---|---|---|---|---|---|
| | | கட்சிகள் | சுயேச்சை | கட்சிகள் | சுயேச்சை |
| மத்திய | கண்டி | 10 | 08 | 02 | - |
| | மாத்தளை | 12 | 08 | 02 | - |
| | நுவரெலியா | 14 | 19 | 02 | - |
| வட மேல் | குருநாகல் | 08 | 05 | 03 | - |
| | புத்தளம் | 12 | 13 | 02 | - |

A-சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களின் எண்ணிக்கை, B- விருப்புக்களை எண்ணுவதற்கு தகைமை பெற்ற வேட்பு மனுக்களின் எண்ணிக்கை

இத்தேர்தல் முடிவுகள் அட்டவணைகள் 19A-B இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 19A
மத்திய மாகாண சபைத் தேர்தல் 2009
கட்சிகள் பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை

| மாவட்டம் | கட்சிகள் | | |
|---|---|---|---|
| | ஐமசுமு | ஐதேக | மொத்தம் |
| கண்டி | 18 | 12 | 30 |
| மாத்தளை | 7 | 3 | 10 |
| நுவரெலியா | 9 | 7 | 16 |
| Bonus | 2 | - | 2 |
| மொத்தம் | 36 | 22 | 58 |

(தொடரும்...)

## 3,171...

பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் அனைவரும் புதுவருட கோவிட் கொத்தணியுடன் தொடர்புடையவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

அதன்படி, இந்நாட்டு மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 465, 940 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றில் இருந்து இதுவரை பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 386, 509 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கோவிட் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 10,320 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-3)

## கோவிட்டால்...

கும் குறைந்தவர்கள் 7 பேரும் 30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்டவர்கள் 40 பேரும் 60 வயதுக்கு மேற்பட்ட 133 பேரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 97 ஆண்களும் 83 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் இதுவரையில் கோவிட் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 10,320 ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3)

## கணவன்,...

நுணாவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 97 வயதான காசிநாதர் மற்றும் 89 வயதான அவரது மனைவி ஆகியோர் கடந்த சில தினங்களுக்கு முன்பு கொரோனாத் தொற்று ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் கடந்த வாரம் சிகிச்சை பலனின்றிமனைவிஉயிரிழந்து அவரது உடல் மின் தகனத்திற்காக கொண்டு செல்லவிருந்த தருணத்தில் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை கணவனும் கொரோனாவால் உயிரிழந்துள்ளார். (ம-3,30)

## பருத்தித்துறை...

மாற்று அன்டிஜன் பரிசோதனையில் 11 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

133 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையிலேயே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்களை மருத்துவ நடவடிக்கைகளுக்கு உட்படுத்துவதுடன் தொடர்புபட்டவர்களை தனிமைப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-3)

## வவுனியாவில்...

விபத்துக்குள்ளானதில் இளைஞன் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்று இரவு இடம்பெற்ற விபத்து பற்றி மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவில் இருந்து ஈரப்பெரியகுளம் நோக்கிசென்றமோட்டார் சைக்கிள் ஈரப்பெரியகுளம் சந்தியில் எதிரே வந்த கடற்படையின் பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் பலியாகியுள்ளார்.

இதில் அனுஸ்க அபயரத்தின லக்மால் (வயது - 28) என்ற இளைஞனே மரணமடைந்தவராவார். (ம-3,299)

## அவசரகாலச்...

குறித்த பிரேரணையானது ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவினால் நேற்று முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த பிரேரணை தொடர்பான விவாதம் காலை 10.30 மணியளவில் ஆரம்பமாகியிருந்தது.

இதேவேளை பாராளுமன்றில் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பிற்கு அமைவாக அத்தியாவசிய உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கான அவசரகால நிலைமைகள் குறித்த ஒழுங்குவிதிகள் மீதான சட்டமூலம் 80 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அவசரகாலச் சட்டம் மீதான வாக்கெடுப்பிற்கு ஆதரவாக 132 வாக்குகளும் எதிராக 52 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன.

இதேவேளை குறித்த வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இராஜவரோதயம் சம்பந்தன், தர்மலிங்கம் சித்தார்த்தன், கோவிந்தன் கருணாகரம், விநோனோதராதலிங்கம் ஆகியோர் பங்குகொள்ளவில்லை.

அத்தியாவசிய உணவுப்பொருள் விநியோகம் மற்றும் பதுக்குதலை தடுப்பதற்காக ஜனாதிபதியினால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால ஒழுங்குவிதிகளை நிறைவேற்றுவதற்கான பிரேரணையே பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அவசரகாலச் சட்...

அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தியிருப்பதன் ஊடாக பொதுமக்கள் மீது அடக்குமுறையைப் பிரயோகித்து ஜனநாயக உரிமைகளையும் சுதந்திரத்தையும் மட்டுப்படுத்தும் வகையிலேயே அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் உள்ளிட்ட பொதுமக்களின் சுதந்திரத்தை அவசரகாலச் சட்டத்தின் மூலம் மிகவும் மிலேச்சத்தனமான முறையில் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் முற்படுகின்றது.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து நேற்று திங்கட்கிழமை ஊடகங்களுக்கு விடுத்திருக்கும் விசேட அறிவிப்பிலேயே எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## 121 பேருக்கு...

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றிரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்றுப் பரவல் அடைந்துள்ள நிலையில் 121 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,250,299)

## யாழ்.மாவட்ட...

இணைந்து வெளியிட்டுள்ள நேற்றைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அன்டிஜன் மற்றும் பிசிஆர் பரிசோதனைகளின் அடிப்படையில் குறித்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில்,வேலணையில் 09 பேர், ஊர்காவற்றுறையில் 10 பேர், யாழ்ப்பாணத்தில் 2 பேர், நல்லூரில் 33 பேர், சண்டிலிப்பாயில் 68 பேர், உடுவிலில் 35 பேர், தெல்லிப்பழையில் ஒருவர், கோப்பாயில் 17 பேர், பருத்தித்துறையில் 32 பேர், மருதங்கேணியில் ஒருவர், யாழ்.சிறைச்சாலையில் ஒருவர், யாழ். பொலிஸ் நிலையத்தில் ஒருவர், கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒருவர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## அபாய நிலை...

தற்போதுள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் மாவட்டத்தில்கொரோனா நிலைமை கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் நாளாந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து செல்கின்ற போக்கு சற்று குறைவடைந்து காணப்படுகின்றது.

யாழில் நேற்று 213 நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மொத்தமாக 13 ஆயிரத்து 944 பேர் மாவட்டத்தில் நேற்றுவரை தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இறப்புக்களைப் பொறுத்தவரை 274 ஆக அதிகரித்துள்ளது. அதேநேரம் 5,641 குடும்பங்கள் யாழில் தனிமைப்படுத்தலில் உள்ளன.

மேலும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தடுப்பூசி ஏற்றும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. முதலாவது டோஸ் தடுப்பூசி 2 லட்சத்து 965 ஆயிரத்து 315 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதேநேரம் இரண்டாம் கட்ட தடுப்பூசியானது நேற்றுவரை 2 லட்சத்து 15 ஆயிரத்து 552 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக தடுப்பூசி வழங்குவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மேலும் 30 வயதிற்குட்பட்ட 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசிவழங்குவதற்குரிய ஏற்பாடுகள் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்குரிய விபரங்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக அனுப்பியிருக்கின்றோம். அதற்குரிய அறிவுறுத்தல் கிடைத்தபின் தடுப்பூசி வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படும்.

மேலும் தற்பொழுது யாழ்ப்பாணம் மாவட்டத்தில் தொற்று நிலைமையானது அபாய நிலையிலேயே காணப்படுகின்றது. பொதுமக்கள் பொது முடக்கத்தினை துஷ்பிரயோகம் பண்ணாது தங்களையும் பாதுகாத்து சமூகத்தையும் பாதுகாத்துச் செயற்பட சகலவிதமான விழிப்புணர்வு செயற்பாடுகளும் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன .

ஒவ்வொரு கிராமங்கள்தோறும் 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு வீடுகளுக்கு சென்று தடுப்பூசி வழங்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது என்றார். (ம-3,18,33)

## வடக்கில் 10...

மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் வசிக்கும் ஒருவருக்கு கோவிட்-19 நோய்த்தொற்று உள்ளமை கண்டறியப்பட்டு மந்திகை மருத்துவமனையில் 10 நாட்கள் சிகிச்சையளிக்கப்பட்டது. அவர் நேற்று குணமடைந்தார் என வீடு செல்ல அனுமதிக்கப்பட்டார்.

அவர் வீட்டில் சுயதனிமைப்படுத்தலில் இருந்தவேளை நேற்று உயிரிழந்துள்ளார் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதவேளை கைதடி முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வந்த 85 வயதுடைய பெண் சாவகச்சேரிமருத்துவமனையில் நேற்று உயிரிழந்துள்ளார். அவருக்கும் கோவிட்-19 தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் கொரோனா விடுதியில் சிகிச்சை பெற்று வந்த மேலும் ஒருவர் நேற்று திங்கட்கிழமை காலை உயிரிழந்துள்ளார்.

மல்லாகம் பகுதியைச் சேர்ந்த 65 வயதானவரே இவ்வாறு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் குறித்த தினத்தில் 97 வயதான முதியவர் ஒருவரும் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

கோவிட் தொற்று காரணமாக சிகிச்சை பெற்றுவந்த மற்றும் தொற்றுக்குள்ளான நிலையில் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த வெளிக்குளம் பகுதியில் 52 வயதான பெண் ஒருவரும் வைரவபுளியங்குளம் பகுதியில் 85 வயது ஆண் ஒருவரும் கோவில்புதுக்குளம் பகுதியில் 91 வயது பெண் ஒருவரும் என 3 பேர் கோவிட் தொற்றால் மரணமடைந்துள்ளனர்.

இந்நிலையில் மரணித்த 3 பேரினதும் உடல்களையும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்ய சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் 54 வயது ஆண் ஒருவரும் நேற்று முன்தினம் இரவு மரணமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவில் - புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரிபணிமனைக்குட்பட்ட பகுதியில் நேற்றைய தினம் இரண்டு பேர் கொரோனாத் தொற்றினால் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர்களில் ஒருவர் சுகவீனம் காரணமாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரிற்கு முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.இதனையடுத்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று மரணமடைந்தார்.

மற்றைய ஒருவர் திடீர் சுகவீனமுற்ற நிலையில் அவரது வீட்டில் மரணமடைந்திருந்தார். அவருக்கு முன்னெடுக்கப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர்களை எரியூட்டுவதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவத்தில் வெள்ளப்பள்ளம் மற்றும் ஆற்றுப்புலவு பகுதியைச் சேர்ந்த 32, 69 வயதுடைய இருவரே மரணமடைந்துள்ளனர்.

குறித்த இரண்டு மரணங்களுடன் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரிபணிமனைக்குட்பட்ட பகுதியில் 11 மரணங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,299)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 2217603, 021 567 1532

# மரண அறிவித்தல்



திருமதி

## ஜெயபாக்கியலட்சுமி சிவசாமி

(ஓய்வுபெற்ற ஆசிரியர் - யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை)

**பிறப்பு : 1940.06.30 இறப்பு : 2021.09.06**

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடத்தினை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஜெயபாக்கியலட்சுமி சிவசாமி நேற்று (06.09.2021) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலங்கைநாதர் - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிவசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நடனசபாபதி, விஜயலட்சுமி, சுப்ரமணியம், தானியலட்சுமி மற்றும் அன்னபூரணம், குமாரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கண்மணி, கைலாசபிள்ளை, இராசலட்சுமி, பத்மநாதன், ஆறுமுகம் மற்றும் புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெயராணி, கோகுலராணி, நித்தியராஜா, காலஞ்சென்ற அருந்தவராஜா, உதயராஜா, விக்னராஜா, கிருஷ்ணலிங்கம், தவபாலன், சிவபாலன், நடனரூபவதி, காந்தமலர், புஷ்பலட்சுமி, யதர்சினி, துஷ்யந்தன், டிலீப், டிலாணி, தாரணி, ரஜீதன், துவாரகன், பதீதன், அபர்ணா ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற மகேந்திரலிங்கம் மற்றும் சற்குணலிங்கம், வசந்தி, ஜெயக்குமார், பத்மஸ்ரீ, சுகுமார், மேகலா ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

இந்து மகளிர் ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

077 267 7392
077 844 8049
076 609 9339

(7864)

தகவல்:
குமாரலிங்கம் (சகோதரன்)

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 - 12 - 1931



மறைவு 03 - 09 - 2021

## மகேஸ்வரி காசிநாதர்

யாழ். சாவகச்சேரி நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மகேஸ்வரி காசிநாதர் கடந்த 03.09.2021 (வெள்ளிக்கிழமை) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி வாரித்தம்பி தம்பதியரின் அன்பு மருமகளும் காசிநாதரின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராஜபூபதி, சிவகுருநாதன், யோகநாதன் மற்றும் அருளம்மா, நேசம்மா, தில்லைநாதன், தம்பிநாதன், செல்வராணி, செல்வமலர், சிவநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ரவீந்திரன் (சுவிஸ்), ரஞ்சினி (ஜேர்மனி), ராஜினி (ஜேர்மனி), கலாயினி (இலங்கை), விமலேந்திரன் (பிரித்தானியா), இந்திரகுமார் (பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் நந்தினி, சிவரட்ணம், மோகனராஜன், பாலேந்திரா, கோமதி, ரஜனி ஆகியோரின் அன்பு மாமியாரும் கலக்சன், பிரதட்ஷன் - பிரதீபா, சங்கீதன் - ரம்மியா, கௌதம், கௌசிகா, நிவிசாந் - ஜனனி, அனுசாந், நிரோஜன், பிரணவன், சாய்ரூபன், கிரிசா, கரிஸ், சகானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சாறாலேயா, லூயிஸ் அயான் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (08.09.2021) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

தோற்றம் 14 - 02 - 1924



மறைவு 06 - 09 - 2021

## வாரித்தம்பி காசிநாதர்

நுணாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் நுணாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி காசிநாதர் நேற்று (06.09.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி வாரித்தம்பி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் அன்புச் சகோதரரும் பத்மநாதனின் அருமை பெறாமகனும் ரவீந்திரன் (சுவிஸ்), ரஞ்சினி (ஜேர்மனி), ராஜினி (ஜேர்மனி), கலாயினி (இலங்கை), விமலேந்திரன் (பிரித்தானியா), இந்திரகுமார் (பிரித்தானியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தினி, சிவரட்ணம், மோகனராஜன், பாலேந்திரா, கோமதி, ரஜனி ஆகியோரின் அன்பு மாமனாரும் கலக்சன், பிரதட்ஷன் - பிரதீபா, சங்கீதன் - ரம்மியா, கௌதம், கௌசிகா, நிவிசாந் - ஜனனி, அனுசாந், நிரோஜன், பிரணவன், சாய்ரூபன், கிரிசா, கரிஸ், சகானா ஆகியோரின் அன்புப் பேரனும் சாறாலேயா, லூயிஸ் அயான் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் (09.09.2021) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-2621)

சங்கம் வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

ரஞ்சி (மகள்) : +4917630165578
ரவி (மகன்) : +41796762110
கலா (மகள்) : 94775480078

தகவல்:
கலாயினி பாலேந்திரா
மற்றும் பேரப்பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.